சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு வைகாசிமாதம் 6-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 18-ம் இலக்கம்

## மேதினமாகிய தொழிலாளர் தினம்

கத்தோலிக்கமக்களாகிய நமக்கு வைகாசிமாதம் ஒரு புனிதமாதம். அது தேவமாதாவின் வணக்க மாதம்: அதன்முதற்தினத்திலேயே தேவதார்யாரின் அருமைப்பத்தாவும், திருச்சபையின் பாதுகாவலருமாகிய அர்ச். சூசையப்பருக்கு விழாவெடுப்பது மிகவும்பொருத்தமானதே. காலஞ்சென்ற 12-ம் பத்திநாத பாப்பானவர் 1955-ம்ஆண்டுஅத்தினத்திலேயே தொழிலாளரின் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பரின்திருநாளை ஏற்படுத்தியதும் கத்தோலிக்க உலகம் இதனைஉவந்து வரவேற்றது. கத்தோலிக்கதொழிலாளர்களும் திருச்சபையின் அவயவங்களாய் இருப்பதாலே அதன்பாதுகாவலரது கண்காணிப்பிலே தொழிலாளரை வைத்துக் கௌரவிப்பது சாலச்சிறந்ததே.

சூசையப்பரில் காணப்பட்ட இரண்டு முக்கிய இலட்சணங்கள் அவரதுஅயராஉழைப்பும், நீதிதவறாமையுமே என்றால் மிகையாகாது. அவர் எவ்வாறு தமதுவேலையை — தச்சுவேலையை — அல்லும்பகலும் அரும்பாடுபட்டுச் செய்தாரோ, அதேவிதமாகத் தொழிலாளரும் தங்களால்இயன்றமட்டும் பிரயாசப்பட்டுத் தங்கள்நாளாந்த தொழிலைச் செய்யவேண்டியவர்களாய் இருக்கின்றனர். தொழில் என்பது கிறீஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் ஒருஅழைத்தலென்று கருதப்படவேண்டும். நமது லௌகீகவாழ்க்கைக்கும், ஞானவாழ்க்கைக்கும வழிவகுப்பது நம்முடைய தொழிலே. ஒவ்வொருவரும் தனதுஆத்மீக ஈடேற்றத்தை அடைவதற்குத் தொழிலை ஒருகருவியாகத்தேவன் நியமித்திருக்கிறார். கிறீஸ்தவ தொழிலாளிக்கு அவன்தொழில் "வரப்பிரசாதத்தின் வாய்க்கா"லாக இருக்கிறது. தனக்கும், தன்சகபாடிகளுக்கும் வரப்பிரசாதத்தைப் பெறுவதற்கு ஒரு கிறீஸ்தவனின்தொழில் அரியசந்தர்ப்பத்தை அளிக்கின்றது. தேவசிநேகம், பிறர்சிநேகம், உண்மை, நேர்மை, நீதியாகிய புண்ணியங்களை வளர்ப்பதற்குத் தொழில் அருந்துணைபுரிகிறது.

ஆனால், மேதினக்கொண்டாட்டம் தொழிலாளருக்கு நன்மைகளையோ, அன்றேல் தீமைகளையோ விளைவிக்கலாம். தொழிலாளர்எல்லோருந் திரண்டு தங்கள் ஒற்றுமையைக் காட்டுவது மிக நன்றே. ஆனால், அச்சந்தர்ப்பத்திலே முதலாளிகளைப்பற்றி அநீதியாகத்தூற்றுதல், நிந்தித்தல் அல்லது அவர்களை வெருட்டுதல் தீமையானதே. தொழிலாளர் தங்கள்உரிமைகளுக்காக—சம்பள உயர்வு, உபகாரச்சம்பள வசதிகள், வேறு சலுகைகளுக்காக வாதாடுதல் நியாயமே. ஆனால், அவர்களும், அவர்கள் பேச்சாளரும் தங்கள்கடமைகளைக் கவனியாது, முதலாளிமாருக்குள்ள கஷ்டங்களை உணராது, வாயிலே வந்தபடியெல்லாம் பிறற்றுவது தீமையானதே. தொழிற்சங்கங்களில் அங்கத்துவம்வகித்துத் தம்மிடையே ஒற்றுமையை நிலைநாட்டி அடிப்படைச் சுதந்திரங்களைப் பெற எத்தனிப்பது விரும்பத்தக்கதே. ஆனால், ஆவேசஉணர்ச்சிகளால் உந்தப்பட்டு முதலாளிமாரை வெறுப்பதோ அல்லது அவர்களின் பொருட்களை நாசஞ்செய்வதோ அல்லது அவர்களுடைய வருமானத்தைக் குறைக்கப்பார்ப்பதோ தப்பிதமே. தங்கள்உரிமைகளைப் பெறுவதற்காக முதலாளிகளை விட்டுப் பிரிந்து தனிப்பட்ட தொழிற்சங்கங்களை நிறுவுதல் மிகவும் நன்று. ஆனால், அரசியற்கட்சித் தலைவர்களைத் தங்கள் தொழிற்சங்கத்தலைவர்களாக வெளிப்படையாகவோ அன்றேல் மறைமுகமாகவோ நியமிப்பது அதிகம் தீமையானது. தொழிற்சங்கங்களுக்கும், ஜனநாயகஆட்சிக்கும் நெருங்கிய ஒப்புமை உண்டு. எவ்வாறு ஜனநாயகஆட்சி மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகிறதோ அவ்விதமே தொழிற்சங்கங்களும் தொழிலாளிகளால் தொழிலாளிகளுக்காக நிறுவப்படும் சங்கங்களாக இருக்கவேண்டும். அரசியற்செல்வாக்குக்காகப் பாமரதொழிலாளிகளை ஏமாற்றித் தங்கள்நன்மையையே தேடும்போலித்தலைவர்களுக்கு அங்கு இடமிருக்கக்கூடாது.

உண்மையான ஒருதொழிலாளியிலே இருக்கவேண்டிய சிறந்த பண்பு "பிறர்சிநேகம்". முதலாளியின் உயர்ச்சியிலேயே தொழிலாளியின் செல்வாக்குத் தங்கியிருக்கிறது என்பதை நாம்மறக்கமுடியாது. உதாரணமாக ஒருஅரசாங்கம் பொருளாதாரத்திலே சிறந்துவிளங்குமாயின் அந்நாட்டு அரசாங்கஉத்தியோகத்தர் எல்லோர்க்கும் உயர்ந்தசம்பளம், நிறைந்த "போனஸ்" முதலியன கிடைக்கமுடியும். ஆனால், பொருளாதாரத்துறை குன்றிவருமாயின் அரசாங்க ஊழியருக்குச் சம்

[8-ம் பக்கம் பார்க்க]

## சர்வேசுரனின்தாய் என்தாய்

தாம் அதிகமாகநேசித்த அப்போஸ்தலரைப்பார்த்து யேசுபிரான் "இதோ உன்தாய்என்று உரைத்த அந்நேரமுதற்கொண்டு அர்ச். அருளப்பர் மரியம்மாளைத் தமதுவீட்டில் சேர்த்துக்கொண்டார்". நல்லகள்வனுக்கு மோட்சம்அளித்த தேவசுதன் அருளப்பருக்குத் தமதுமாதாவை அளித்தார். தமக்கு அதிகம்பிரியமான இருபொக்கிஷங்களை இருவருக்குப் பகிர்ந்துகொடுத்தார். மனந்திரும்பின இராயப்பருக்குத் தமதுதிருச்சபையையும், மனதிற்குகந்த அருளப்பருக்குத் தமது திருமாதாவையும் கொடுத்தார். மறுதலித்தவருக்குத் திறவுகோலையும், மனமுவந்தவருக்குக் அன்னை மரியாளையும் ஒப்புக்கொடுத்தார். மேய்ப்பரிடம் மந்தையைக் காட்டி, "இதோஉன் ஆடுகள்" என்றார். நேசனிடம் அன்னையைக் காட்டி, "இதோ உன்தாய்" என்றார். யேசுஇரட்சகரின் செபத்திலும், தபத்திலும், வாக்குத்தத்தங்களிலும், மரணத்திலும், உத்தானத்திலும் நாம்ஒவ்வொருவரும் பங்குபெறுவதுபோல், அவர்தாயாரிலும் நமக்குப்பங்குண்டு. இன்று நீ நம்மோடு மோட்சத்திலிருப்பாயென்ற வார்த்தைகளினால் நம்மில்ஒவ்வொருவருக்கும் மோட்சஇராச்சியத்தில் இடமிருப்பதுபோல், "இதோ உன்தாய்" என்றமரணசாசனத்திலும் நாம் பங்குபெறுகின்றோம்.

கன்னிமரியம்மாள் அருளப்பருக்கு மாதாவானதுபோல் நமக்கும் மாதாவாகின்றாள். நாம் யேசுக்கிறீஸ்துநாதரின் சகோதரராகவே மரியம்மாளின் புத்திரர்களாகிறோம். மரியம்மாளின் அன்னைத்துவம் இருவகைப்படும். அவள் பரிசுத்தரான தேவனுக்கும்தாய்; பாவிகளாகிய நமக்கும் தாய். இரட்சகரின்தாயார் இரட்சிக்கப்பட்ட நமக்கும் தாயாராகின்றாள். சீவியம்அருளத் தாயாரைத் தெரிந்தெடுத்த தேவன் சீவியபலன் அடைபவர்களைத் தாயாரின்றித் தவிக்கவிடுவாரா? கிறீஸ்துநாதருக்குத் தாயார்அவசியமானால், கிறீஸ்தவர்களுக்குத்தாயார் அவசியமில்லையா? அருளப்பருக்குத் தாயாரைஅளித்த நல்லதேவன் நம்மைமாத்திரம் தாயற்றவர்களாய்த் தனிக்கவிடுவாரோ? மரணபரியந்தம் நேசித்த தமது நேசமக்களை அன்னையின்றித் தவிக்கவிட்டுப் பரலோகம் சென்றுவிட்டாரென்று நாம்எண்ணலாமா?

சிலுவையடியில்நின்ற தாயாருக்கு ஒரேயொருமகன் தான். இந்தஏகமகன் சிலுவையிலே உயிர்துறக்கப்போகையில், சகலரும் தேவதாயின் புதல்வராகின்றார்கள். ஆ! என்னமாற்றம்! எஜமானனை இழந்து ஊழியனைப் பெறுகிறாள்! போதகரை இழந்து பாதகரைப் பெறுகிறாள்! தேவகுமாரனை இழந்து செபதேயின் குமாரனை ஏற்றுக்கொள்ளுகிறாள். சிருஷ்டிகரை இழந்து சிருஷ்டிகளின் அன்னையாகின்றாள்! தலைச்சன்மகனை இழந்து சுவிகாரப்பிள்ளைகளை ஏற்றுக்கொள்ளுகின்றாள்! பெத்லகேமில் தேவனை அற்புதமாகப் பெற்றெடுத்தபொழுது ஆனந்தக்கண்ணீர் சிந்தினாள். கல்வாரியில் பாவிகளை வியாகுலத்தில் பெறும்பொழுதோ பிரலாபக்கண்ணீர் சிந்துகிறாள். பரிசுத்தரைப் பெற்ற நேரத்திலே நட்சத்திரம்காணப்பட்டது. பாவிகளைப் பெற்ற நேரத்திலே சூரியன்மங்கி எங்கும் இருள் அடருகிறது. தேவகுமாரனைப் பெற்றசமயத்திலே வானமும்பூமியும் அக்களித்தன. அவர்பிறந்தபோது தேவதூதர்கள் சங்கீதம்பாடினார்கள். பாவிகளைப் பெற்றநேரத்திலே பூமி அதிர, கற்பாறைகள் பிளந்து போகின்றன. கன்னிமரியம்மாள் தேவனின் தாயாகப்போவதை அறிவிக்கும்படி கபிரியேல்தேவதூதனைச் சர்வேசுரன் அனுப்பினார். கன்னிமரியம்மாள் பாவிகளின் தாயாரென்று உலகிற்கு அறிவிக்கும்படி யேசுநாதர் தானே "இதோ உன்மகன்" என்று திருவுளம்பற்றுகிறார்.

"உங்களை அநாதைகளாய் விடமாட்டேன்" என்ற நேசதேவன் நம்மைஅநாதைகளாய் விட்டுவிடுவாரா? மரியம்மாள் நமது தாயில்லையேல் நாம்மெய்யாகவே

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## அர்ச். சூசையப்பர் பந்தி

யாழ்ப்பாணம், சென்விண்சென்ற் டீ போல் திருமசபை அர்ச். சூசையப்பர் பந்தியின் 54-வது வருடாந்த பொதுக் கூட்டம் சித்திரைமாதம் 15-ந் திகதி ஞாயிறு பிற்பகல் சற்பிரசாதஆசீர்வாதத்தின்பின் டி மொண்ற்போத் சாலையில் நடந்தேறியது. ஆசனக்கோவில் கட்டளைக்குருவர் வண. எல்.ஜே. அகஸ்ரீன் சுவாமிகள் தலைமை வகித்தார். 1961-ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையும், வரவுசெலவும் பந்தியின் கௌரவ காரியதரிசி திரு. ஏ. மரியாம்பிள்ளை அவர்களால் படித்துச் சபையோரால் அனுமதிக்கப்பட்டன.

பின்னர் திரு. பி. சவரிமுத்து அவர்கள் "தருமக் கண்ணுடிகள்" என்ற தலையங்கத்தின்கீழ் தருமத்தின் அத்தியாவசியகத்தைப்பற்றியும், தரும சேவையை முக்கியமாகத் தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்ட சில அர்ச்சியசிட்டர்களின் வாழ்க்கையைப் பற்றியும் எடுத்து விளக்கினர். அவரைத்தொடர்ந்து வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமிகள் அர்ச்சியசிட்டதனத்தையும், தருமத்தையும் பிரிக்கமுடியாதென்றும், தேவசிநேகமும் பிறர்சிநேகமும் கத்தோலிக்கரின் வாழ்க்கையில் என்றும் காணப்படவேண்டிய குணங்கள் என்றும் விளக்கிக்கூறினர்.

செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்கள் சபையோருக்குத் தோபியாஸ் தீர்க்கதரிசியின் வாழ்க்கையை எடுத்து விளக்கித் தருமம் என்றும் உலகாக்குமெனக் கூறினர்.

பந்தியின் தலைவர் திரு. கே. கே. அம்புறோஸ் அவர்கள் கூறிய நன்றியுரையின்பின் வழமையான செபத்துடன் கூட்டம் நிறைவாயிற்று.

---

### வண. எஸ். ஏ. பெஞ்சமின்சுவாமி அவர்களின்

## 24-ம் வருட நன்மரண ஞாபகம்

என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே
என் மரணத்திலும் மறவாதீர்கள்.
நேற்றுஇருந்தான்-இன்று இறந்தான்
என்பதைத்தவிர
இச்சரீரத்துக்குப் பெருமைவேறில்லை.
உலகமும், உலகவாழ்வும் இவ்வளவே.

என்னால் என்றும் மறக்கக்கூடாத விதமாய் என்னை அளைகடந்த அன்புடன் நேசித்த வண. பெஞ்சமின்சுவாமிஅவர்கள் மரணமான இருபத்திநாலாம்வருடம் நிகழும் வைகாசிமாதம் 13-ந்திகதி வருகிறபடியால் வதிரி, அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் 11-ந்திகதி வெள்ளிக்கிழமை [illegible]30மணிக்கு பாடற்பூசை நிறைவேறும் இதைக்கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், பந்துமித்திரர், விசுவாசிகள் அனைவரும் இவ்வாத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு வினயமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் சிந்தையைவிட்டு அகலாத
வ. லூக்கேஸ்பிள்ளை.

காவெட்டி

---

### நன்றித்துதி

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், கன்னிசுத்த தேவதாயின் வேண்டுதலாலும் யான் கேட்டதிகிடைக்கப்பெற்றும் இன்னும் எனது காரியங்கள் அனுகூலமாகும்படி இரந்து நிற்கும்

— அடியான்.

---

## புதிய குரவருக்கு வரவேற்பு

பாஷையூரைத் தமது ஜனனபதியாகக் கொண்டவரும், சென்ற சித்திரைமாதம் 13-ந் திகதியன்று குருப்பட்டமபெற்றவரும், பாஷையூரின் இரண்டாவது குரவருமான வண. பே.ப. பிலிப், ஓ.எம.ஐ. அவர்கள் தமது பங்குக்கோவிலாகிய அர்ச். அந்தோனியார்ஆலயத்தில் சென்றமாதம் 23-ந் திகதி தமதுமுதற்பூசைப்பலியை ஒப்புக்கொடுத்தார். அவ்வமயம் பல குருப்பிரசாதிகள், அவருடைய பெற்றோர், இனசனர், நண்பர் ஆதியோர் சமுகமளித்து அவரின் ஆசியைப்பெற்றனர். பூசையின்போது வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியவர்கள் புதியகுரவரின் அருங்குணதிசயங்களைப்பற்றியும், குருததுவததின் மகிமையைப்பற்றியும் சிறந்த ஒருபிரசங்கம் நிகழ்த்தினர்.

அன்றுமாலை தேவநற்கருணைஆசீர்வாதம் புதியகுரவரால அருளப்பட்டபின் ஆலயமுன்றிலில் ஒருபகிரங்க வரவேற்புவிழாநடாத்தி அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

பாஷையூர் கட்டளைக்குரவர் வண. ஏ. வாசன்போக்சுவாமியவர்கள் விழாவுக்குத் தலைமைவகித்தார். வண. எல். ஏ. சிங்கராயர், திரு. பி. சவிரிமுத்து, யாழ்ப்பாணமேயர் திரு. எம். யேக்கப், திரு. ஜே. மனுவேல்பிள்ளை என்போர் புதிய குரவரைப்பாராட்டிக் குருத்துவத்தின் சிறப்பைப்பற்றி நன்கு விளக்கி அவருக்கு நல்லாசிகூறிநின்றனர்.

பொதுமக்களின்சார்பில் ஆசிரியர் எஸ் இம்மனுவேல் ஒருவந்தனேபசாரப்பத்திரம் படித்துவழங்கினர். ஆசிரியர் ஆபிரகாம்அவர்கள் இயற்றிப்படித்த இனியபாக்கள் கேட்போர்க்கு இன்பத்தையூட்டின. பின்னர் புதியகுரவரின் இனசனர் பலவிதஅன்பளிப்புகளை அவருக்குச் சமர்ப்பித்தனர்.

சுவாமியவர்கள் நன்றிகனிந்த இதயத்துடன் பேசியவிடத்து: தான் சர்வேசுரானுக்கும், தமது பெற்றோருக்கும், தன்னைக் குருத்துவபாதையிலே வழிநடத்திய வண. ஜே. நீக்கிலாஸ் சுவாமிகளுக்கும் நன்றிகூறவேண்டியதெனத் தெரிவித்தார். அவ்வூர்மக்களும், பிறரும் விழாவில் பங்குபற்றித் தம்மை — இல்லை, குருத்துவத்தை மகிமைப்படுத்தியதற்காகத் தாம் நன்றி கூறுவதாகத் தெரிவித்தார்.

ஆசியர் திரு. எஸ். அழகையா, எம். எம். சி. அவர்கள் கூறிய நன்றியுரையுடனும், புதிய குரவரின் ஆசிருடனும் விழாஇனிதே நிறைவுற்றது.

---

### குருகுலசூரிய மரியா கிளாரா பேர்னுன்டோ அவர்களின் மும்மாத

## மரண ஞாபகம்

நீர்கொழும்பு, பெரியதெரு வெட்டுவாய்க்கால், கரையோரம் வசிக்கும் கொழும்பு, கத்தோலிக்க அச்சியந்திரசாலையில் கடமையாற்றும் திரு. கு. கு. மில்ற்றன் வீமா அவர்களின் அருமைத் தாயாரான திருமதி கு. கு. மரியா கிளாரா பேர்னுன்டோ அவர்களின் மும்மாத மரணஞாபகத்தை முன்னிட்டு நீர்கொழும்பு, பெரியதெரு அர்ச். அற்புத மரியாயின் ஆலயத்தில் இம்மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமைகாலை 6-15மணிக்கு அவவின் ஆத்மசாந்திக்காக நடைபெறும் திக்கப்பாடற்பூசைக்கு அவவின் அன்பர், உற்றார், உறவினர் சகலரும் சமுகம் தந்து மன்றாடும்படி [illegible]

— துயரக் குழுவினர்

---

## இரா ஆராதனை — வந்தனை

**[அம்பிற்றிய, தேசீய குருமடத்திலுள்ள இரா ஆராதனை அணியைப்பற்றி ஆறுமாதங்களுக்கு ஒருமுறை பிரசுரமாகும் அறிக்கைப்பத்திரம் — வீத 1962. இது கொழும்பிலுள்ள திருஇருதய இராசாங்கத்தின் கிளையாகும்.]**

[ III ]

**ஆசிரியர் உரை**

### முடிவு பரியந்தம்

இருதயமானது ஒருசடப்பொருள். முடிவுள்ளது. கட்டுப்பட்டுள்ளது. ஆனால், அதன் அறிகுறி அதனுடைய கட்டுப்பாட்டைக் கடந்து செல்லுகின்றது. கிறிஸ்துநாதரிலே அது முடிவில்லா அன்பாகத் திகழ்கின்றது. "தம்முடையவர்களை நேசித்தபின் அவர் அவைகளை முடிவுபரியந்தம் நேசித்தார்" என்று அன்பின அப்போஸ்தலர் உறுதியான வார்த்தைகளிற் கூறுகிறார்.

இந்தப் படையணியின் ஆராதனையிற் பங்குபற்றுகிறவர்களாகிய நீங்கள் எல்லோரும் உங்களது இரா ஆராதனையை ஒருமாதத்துக்கு ஒருமுறையாகுதல் செய்வோமென்று வாக்குப்பண்ணிவிட்டீர்கள். வருடத் தொடக்கத்திலேயே நாங்கள் முடிவுபரியந்தம் நேசிப்பதையும், மாதத்தில் நாம் பரிகாரம் செய்வோம் என்ற வாக்குத்தத்தத்துக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம் என்பதையும்பற்றி ஆலோசிப்பது மிக நன்று. அன்பு வெற்றி கொள்ளுகின்றது, ஆசாளுகின்றது. நாம் அன்பில் வேரூன்றி இருப்போமானல் எமது இரா ஆராதனையைப் புறக்கணிப்பதற்கு வரும் சோதனைகளை வெல்லுவதற்கும், இரா ஆராதனையை முடிவுபரியந்தம் தொடர்ந்து செய்வதற்கும் அது எமக்கு உறுதுணையாக இருக்கும். இதுவே எங்கள்புதுவருட வாழ்த்து. ஒரு வரப்பிரசாதத்தின் வருடம் தொடங்கிவிட்டது. உங்கள் புகழையும், பரிகாரத்தையும், பூசை நேரத்தில் நீங்கள் கேட்கிறவைகளையும், நன்றியறிந்த தோத்திரத்தையும் ஒன்றுகூட்டி உங்கள் செபச்சீவியத்தை இரா ஆராதனையில் நீடித்துக் கொள்ளுங்கள். பிரயாசைப்படுவது உண்மையான அன்பை நிரூபித்தலாகும்.

### தியானம்

**மாணிக்கும் பாவிகள் :** கடவுள் காலத்தையும், ஞாலத்தையும் கடந்த வல்லவர். ஆனால், அவர் மனிதனுக்கு ஒரு சிறு காலத்தை இவ்வுலகில அளித்திருக்கிறார். ஏனெனில், மனிதன் அச்சொற்ப காலத்தையும் நன்றாகப் பயன்படுத்தித் திரும்பவும் தம்மிடம் வரும்பொருட்டே ஆகும். புயற்காற்றின் மத்தியிலே சொரியும் இலைகளைப்போல மனிதன் சாவதை நாம் காண்கின்றோம், கேட்டுஅறிகின்றோம். ஆனால், எம்மவரில் எத்தனைபேர் கடவுளைத் தரிசிக்க ஆயத்தமாக இருக்கிறோம்? கடவுளுக்கு இரவிரவாய் வந்தனை செலுத்துகிற நாம் இந்த நிமிஷத்திலே கடவுளை முகமுகமாய்த் தரிசிக்க ஆயத்தமாக இருக்கிறோமா?

சாவின்பிடியிலே தவிப்பவர்கட்காக மன்றாடினால் நாமும் எமதுசாவைப் பற்றி மறந்துவிடமாட்டோம். "இப்பொழுதும், எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும". யேசுவின் சிறியபுஷ்பமாகிய அர்ச். திரேசம்மாள் ஒவ்வொருநாளும் நற்கருணைவாங்கியபின் மாணிக்கும பாவிகளுக்காக மன்றாடுவாள். 'அரசனின்தொழில்' எனும் சிக்காகோ நகர் பிரதி ஒன்று "ஆத்துமங்களை -விசேடமாக நித்தியத்தின்வாசலருகே நிற்குமஆத்துமங்களை அன்பின்அரசனிடம் கொண்டுவாருங்கள்" எனக் கூறுகின்றது. இதுவே 1962-ம்ஆண்டுக்கு நாம தெரிந்து கொள்ளவேண்டிய நலல தீர்மானம. எப்படி இத்தீர்மானத்தை நிறைவேற்றலாம்? பூசையினாலும், இராஆராதனைமூலமுமாகவே நாம் இதனை நிறைவேற்றலாம.

"யேசுவின் திருஇருதயமே உம்முடையஇராச்சியம் வருக"

### அணியை விருத்திபண்ணுவோரும் அதன் அங்கத்தவர்களும்

1. குருநாகலைச் சேர்ந்த திருமதி டி. ஏ. றனவீர,
2. தலவாக்கெல்லையைச் சேர்ந்த திருமதி எவ். எச். கேகல்,
3. ருகமையைச் சேர்ந்த செல்வி டபிள்யு. எம். பி டி சொய்சா,
4. ஜாயலையைச்சேர்நத செல்வி நோயலின் பெர்னுண்டோ.

ஆகியவர்கள் எமது அழைத்தலுக்கிணங்கி எம்முடைய இவ்வியக்கத்தின் விருத்திக்காக உழைக்க முன்வந்ததை பிட்டு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறோம். யேசுவின் திருஇருதயம் இவர்களையும், இவர்களது வேலைகளையும் அளப்பரிய ஆசீர்வாதத்தினால் நிரப்புமென்பதில் ஐயமில்லை. இவர்கள் யாவரும் தமதுகட்டளைக்குருமாருடனும், தம்முடையஇயக்கக் காரியாலயங்களுடனும் சேர்ந்துசேவைசெய்து எமது இவ்விலங்கையை ஒருபுனித தேவஆசிநிறைந்த பூமியாக்குவர் என்பது திண்ணம்.

எமது இவ்வியக்கத்தை விருத்திபண்ணுபவர்களின் தொகை அநேக கோவில்களில் பத்தாக அதிகரித்துள்ளது. தற்போதைய இரா ஆராதனையாளர்களின் முழுத்தொகை 9,176 (ஒன்பதினயிரத்து நூற்று எழுபத்தாறு). 1961-ம் ஆண்டின் ஆனி மாதத்திலிருந்து அதே இயக்கத்தில் 376 (முன்னூற்றெழுபத்தாறு) புதிய அங்கத்தினர் அனுமதிக்கப்பட்டனர்.

மிகத் தீவிரமாக அதிகரித்துவரும் அங்கத்தினர் தொகையைப்பற்றி நாம் மகிழ்ச்சியடைவதில் பயனில்லை. இருந்தும் அவர்களின் பரிசுத்த வாழ்வும், நடத்தையுமே எமது தேவனுக்கும், கோவில்களுக்கும் மகிழ்ச்சியைத் தரும். இதையே நாம் திரும்பவும் எமது குருமாருக்கும், இயக்கவிருத்தியாளருக்கும், அங்கத்தினர்க்கும் அறிவிக்கின்றோம்.

### காலஞ்சென்ற எமது உடன்அங்கத்தினர்களுக்காக மன்றாடிக் கோள்வோமாக!

கடந்த 1961-ம் ஆண்டு ஆவணி மாதம் தெகிவலையைச் சேர்ந்த றிச்சாட் ஞெட்றிக்கோ அலெக்ஸாலும், 1961-ம் ஆண்டு கார்த்திகை மாதம் மொறட்டுவாவைச்சேர்ந்த இசபெல்லா டி சில்வாவும், ஜூலியே வீரசூரியாவும் காலஞ்சென்றார்கள். இவர்களுக்காகவும், ஏனைய காலஞ்சென்ற அங்கத்தவர்களுக்காகவும் சமீபத்திலே மூன்று திவ்வியபூசைகள் செய்விக்கப்பட்டன.

---

### நன்றியறிந்த தோத்திரம்

எனது காலில் உண்டான பயங்கர நோயினால் நான் நெடுங்காலமாக வருந்திக் கடைசியாகஆற்றுதி திருஇருதயநாதரையும், பரி. சதாசகாயமாதாவையும், அர்ச். அந்தோனியாரையும், அர்ச். செபஸ்தியாரையும், அர்ச். ஆரோக்கியநாதரையும், அர்ச். சவேரியாரையும், சந்தியோகுமையோரையும் சரணடைந்து அல்லும்பகலுமாக அனுதினமும் கண்ணீரும் கம்பலையுமாக மன்றாடிவந்து அவர்களின் அனுக்கிரகத்தால் இப்போது [illegible]ன். நேர்த்திப்படி நன்றியறிதலாக இதனைப் பிரசுரஞ்செய்கிறேன.

யாழ்ப்பாணம் டி. எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## ஆசிரியர்களின் அவநம்பிக்கை

இற்றைக்கு ஒருவருடத்தின் முன் அரசாங்கம் பாடசாலைகளை எடுத்துக் கொண்டதை மனமுவந்து வரவேற்று நின்ற ஆசிரியர்கள் இன்று மனக்குழப்பமும், அவநம்பிக்கையு முடையவர்களாய்க் காணப்படுகிறார்கள். அகில-இலங்கை ஆசிரியர்கள் ஐக்கியசங்கம் கல்விமந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள மனுவொன்றிலிருந்து இது தெளிவாகின்றது. அதிலே கல்விப்பகுதி நிர்வாகத்தின்கீழ் தங்களை அச்சுறுத்துகின்ற அநேகபிரச்சினைகளை அவர்கள் எடுத்துக்காட்டி, ஆசிரியசேவையை ஒருமுகப்படுத்திச் சகலபாடசாலைகளினதும் நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்குச் சுதந்திரமான கல்விச்சேவைக் கமிஷன்ஒன்றை நிறுவுமாறு அவரைக் கேட்டிருக்கிறார்கள்.

## சம்பளம் குறைக்கப்பட்டது

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உயர்தர நிர்வாகபதவிகளுக்குரிய சம்பளம் குறைக்கப்படவிருக்கிறது. 1,750 ரூபாமுதல் 2,500 ரூபாவரையுள்ள மாதச்சம்பளபதவிகளுக்கு இனிமேல் 1,500 ரூபாமுதல் 2,000 ரூபாவரை கொடுக்கப்படும். சமீபத்திலே நியமனம்பெற்ற நிர்வாகமனேஜருக்கும், தொழிற்பகுதி மனேஜருக்கும் இப்புதிய விகிதப்படியே சம்பளம் வழங்கப்படும். முதலாந்தர உத்தியோகஸ்தரின் மாதச்சம்பளம் இதுவரை 1,250 ரூபாமுதல 1,750 ரூபாவரை இருந்துவந்தது. இனிமேல் 1,000 ரூபாமுதல் 1,500 ரூபாவரையிலேயே கொடுக்கப்படும்.

## நசரேத்கோஷ்டியின் வெற்றி

புங்குடுதீவுக் கிராமச்சங்கத்தால் சனசமூக நிலையங்களுக்கிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளிலே சென்ற 21-4-62 சனிக்கிழமை நசரேத் சனசமூகநிலையக் கோஷ்டிக்கும், சென் சேவியர்நிலையக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் நசரேத்கோஷ்டி 2—0 கோல்களால் வெற்றியீட்டியது.

## நீதிபதிகளும் சிங்களமும்

1959-ம் ஆண்டுக்குப்பின் நியமனஞ் செய்யப்பெற்றநீதிபதிகளுக்கும், மஜிஸ்றேற்களுக்கும் சிங்களத் தகுதிப்பரீட்சை ஒன்றைநடத்த நீதிப்பரிபாலன சேவைக்கமிஷன் தீர்மானித்திருக்கிறது. இருமாதங்களுக் கிடையிலே நடத்தப்படவிருக்கும் இப்பரீட்சையைக் கமிஷன்நியமிக்கும் ஒருவிசேஷ சபை நடத்தும். ஜி. சி. ஈ (சாதாரண) பரீட்சைத் தராதரத்திற்கமைய இந்தப் பரீட்சையின்தரம் இருக்கும். நீதிஸ்தலங்களில் அரசகருமமொழி நடைமுறைக்குக் கொண்டுவரப்படவேண்டுமானல் இன்னும் மூன்றுவருடங்களில் நீதிபதிகளும், மஜிஸ்றேற்களும் சிங்களத்திலே தகுதிபெற்றிருக்க வேண்டும்.

## மூதூர் உபதேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையில் காலியாக இருந்துவரும் மூதூர்ஸ்தானத்துக்கு நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில் தனதுகட்சியின் அபேட்சகராக ஜனப் முகம்மதலியை நியமிப்பதெனச் சென்ற ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில்கூடிய தமிழரசுக்கட்சியின் காரியக்கமிற்றிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## ஆங்கிலமொழிப் பயிற்சி

அரசாங்ககாரியாலயங்களின் வேலைகளை ஆங்கிலம்தெரியாத ஊழியர்கள் திறமையாகச்செய்ய முடியாதென்று அரசாங்கம் உணர்ந்திருப்பதாலே தாய்மொழிமூலம் கல்விபயின்ற அரசாங்க ஊழியர்களுக்கெல்லாம் வழமையான வேலைநேரங்களுக்குப்பின் ஆங்கிலமொழிப்பயிற்சி அளிக்கப்பட வேண்டுமெனத் திறைசேரி கருதுவதாகத் தெரியவருகிறது.

## 18,000 ரூபா பிணைப்பத்திரம்

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் வேலைபழகும் பட்டதாரிகள் தங்கள்வேலை நிரந்தரமாக்கப்பட்டதும் குறைந்தபட்சம் ஐந்துவருடகாலம் சபையின்கீழ் வேலைசெய்வதாகப் பொருந்திப் பதினெண்ணுயிரம் ரூபா பெறுமதியான பிணைப்பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக்கொடுக்க வேணுமென்ற ஆலோசனை நடைபெறுகிறது. 1959-ம் ஆண்டிற்குப்பின் இ. போ. சபை பயிற்சியளித்து வேலைக்கமர்த்திய பத்துப்பட்டதாரிகள் பிறவேலைகளுக்குச் சென்றமையாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இந்தப் பட்டதாரிகளுக்கு மூன்றுவருடகாலம் பயிற்சியளிப்பதற்குச் சபை பெருந்தொகைப்பணம் செலவிட்டுள்ளது.

## அரிசி இறக்குமதிக் குறைவு

இலங்கை சென்ற 1961-ம்ஆண்டில் 4இலட்சத்து 61ஆயிரத்து 621தொன் அரிசி இறக்குமதிசெய்தது. இதற்கு முந்தியவருடத்தில் அது இறக்குமதி செய்த அரிசி 5இலட்சத்து 19ஆயிரத்து 807தொன்னுகும். ஆகவே முந்திய வருடத்திலும்பார்க்கச் சென்றவருடத்தில் அரிசிஇறக்குமதி 58ஆயிரத்து 86 தொன்னலே குறைந்துள்ளது. அதனல் அரிசியையிட்டுச் சென்றவருடத்தில் பிறநாடுசென்றபணமும் 2கோடியே 49இலட்சத்து 67ஆயிரத்து 812ரூபாவால் குறைந்திருக்கிறது.

## பாடசாலைகளும் பரிசோதனையும்

சகலபாடசாலைகளிலும் கல்வி, நிர்வாகம்எனும் இருதுறைகளிலும் திறமையாக வேலைகள்நடைபெறச் செய்வதற்காகக் கல்விப்பகுதியின் மேற்பார்வையிலே சோதனைக்குழுக்களை அமைக்கக் கல்விப்பகுதி உத்தேசித்திருக்கிறதென்று வித்தியாதிபர் தனது ஆதிக்கத்திலுள்ள பாடசாலைகளினதும், அரசினர் பாடசாலைகளினதும் தலைமை ஆசிரியர்களுக்கெல்லாம் ஒருசுற்றறிக்கைமூலம் தெரிவித்திருக்கின்றார். அதனல் இந்தச் சோதனைக்குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு முழுஒத்துழைப்பும் அளிக்குமாறு அவர்களுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி

கொழும்பிலே சென்ற சித்திரை மாதத்தில் வாழ்க்கைச்செலவுப்புள்ளித் தொகை முன்னர் ஒருபோதுமேயில்லாத பெருந்தொகையாய் 106·3என்று புள்ளிவிபரப் பகுதித்தலைவர் அறிக்கையிட்டிருக்கின்றார். வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை 1953-ம்ஆண்டிலே 10 6 ஆகவிருந்தது. பின்னர் அது படிப்படியாக உயர்ந்துவந்தது. சென்ற 1961-ம்ஆண்டு தைமாதமுதல் குறிப்பிடத்தக்க விதமாய் அதிகரிக்கலாயிற்று. சென்ற மார்கழியிலும், சென்ற பங்குனியிலும் புள்ளித்தொகை 106·2.

## புதிய யேசுசபைக் குரவர்

காலி, சென்ற் அலோசியஸ்கல்லூரிப் பழையமாணவர்களில் மற்றும்ஒருவரான யேசுசபையைச்சேர்ந்த வண. வில்பிறெட் மனதுங்கா பிறதர் அவர்கள் இந்தியாவிலே கேர்சியோங்நகரிலுள்ள ஆர்ச். மரியநாயகிகல்லூரியில் சமீபத்திலே குருத்துவாபிஷேகம் செய்யப்பெறலாயினர். இவர் காலியைச்சேர்ந்தவராயிருந்து காலஞ்சென்ற திரு. எவ். சி. மனதுங்காதம்பதிகளின் புதல்வரும், இலங்கையிலுள்ள திருமீட்பர் சபைக்குருமாரின் சிரேஷ்டரான வண. மார்க்குஸ் மனதுங்கா சுவாமியவர்களின் சகோதரருமாவர். தமது சகோதரரைப்போலவே புதியகுரவரும் குருத்துவஅந்தஸ்தில் பிரவேசிப்பதற்காகத் தமது அரசாங்க உத்தியோக பதவியைக் கைவிட்டுப் பம்பாய் நகரிலுள்ள யேசுசபை நவசந்நியாசமடத்தில் 1954-ம்ஆண்டின் தைமாசத்தில் பிரவேசித்தார். தம்முடைய சகோதரரான சுவாமியாரைப்போலவே தமது குருத்துவஅழைத்தலையிட்டுத் தேவபக்திபற்றுதல்நிறைந்த தம்முடையபெற்றோருக்குத் தாம்கடமைப்பட்டுள்ளாரென்றும், அவர்கள் தங்கள் செபத்தாலும், தூண்டுகோலாலும் தமதுகுருத்துவ அழைத்தலைப் போஷித்துவளர்க்கத் தங்களால் இயன்றதெல்லாம் செய்தார்களென்றும் அறிவித்திருக்கின்றார்.

## சமாதானப் படையின் உதவி

விவசாயம், குடியிருப்புத் திட்டம், சுகாதாரசேவை ஆதியவற்றிற்கெனப் பயிற்சிபெற்ற அமெரிக்க "சமாதானப் படை"யைச்சேர்ந்த தொழில்நுட்பவாதிகளின்சேவையை அரசாங்கம்பெறவிருக்கிறது. இத்துறைகளில் சேவை செய்வதற்கென்று அழைக்கப்படுவாரில் தாதிமாரும் அடங்குவார்கள். இலங்கையிலே தொழில்நுட்பவாதிகளின் போதாக்குறையை நீக்குமாறு இவர்களின்சேவைகளைப் பயன்படுத்திக்கொள்வதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## பரிசுத்தநாட்டுத் திருயாத்திரை

பரிசுத்தநாட்டைத் தரிசித்துத் திவ்வியஇரட்சகரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிநடந்துள்ளவர்கள் அதிர்ஷ்டசாலிகளே. "ஐரோப்பிய சுற்றுப்பிரயாணங்க"ளின் தலைவியென அறியப்படுகின்ற திருமதிமில்லி லொயலா அம்மையாரின் தலைமையிலே இவ்வருடம் இலங்கையர்கள் அநேகர் பரிசுத்தநாட்டுக்குத் திருயாத்திரையாகச் செல்லத் திட்டமிடுவதாகத் தெரியவருகிறது. யாத்திரிகர்கள் வருகிறஆனிமாதத்திலே அங்குசெல்ல ஒழுங்குசெய்யப்படுகிறது. இவர்கள் திருமதி லொயலா அம்மையார் உடன்சென்று வழிநடத்த அவர் தலைமையின்கீழ் செல்லவிருக்கின்றார்கள்.

## இராணுவம் அகன்றது

இராணுவம் இருந்துவந்து பயன்படுத்தியகாரணத்தால் சுமார்ஒருவருடகாலமாக மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணக் கனிஷ்ட தொழில்நுட்பகலாசாலை அடுத்த பாடசாலைத்தவணை ஆரம்பத்துடன் திரும்பவும் நடைபெறவிருக்கிறது. அப்போது கலாசாலைமாணவர்கள் கடுமையாக ஆட்சேபணைகள் செய்திருந்தும் அவற்றைப் பறுவாய்பண்ணுது இராணுவம் அதனுள் புகுந்துகொண்டது. அதனல் வகுப்புகள் அங்கிருந்து ஐந்துமைல்தூரத்திலே கோப்பாயிலுள்ள சிரேஷ்டபாடசாலையில் நடைபெறுவனவாயின.

## புதிய குருப்பிரசாதிகள்

சமீபத்திலே கண்டிமேற்றிராணியாராகிய மகாவந். லேயோ நாணயக்கார ஆண்டகை அவர்கள் அமலோற்பவ மரியநாயகி சபையைச்சேர்ந்த இருபிறதர்மாருக்குக் குருப்பட்டாபிஷேகஞ் செய்யலாயினர். புதிய குரவர்களில் ஒருவர், வண. சிறில் பெறேறுசுவாமியார். மற்றவர் யாழ்ப்பாணமேற்றிராசனத்தைச்சேர்ந்த வண. பி. பி. பிலிப் சுவாமியார். குருப்பட்டாபிஷேகத்தின்போது புதியகுரவர்களின் பெற்றோரும், சுற்றத்தவர்களும் பெருந்திரளாகச் சமூகமளித்திருந்தார்கள்.

## யாழ்வினேதை பொருட்காட்சி

யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையத்திற்கு நிதிசேகரிப்பதற்காக யாழ்விநோத கைத்தொழில் – விவசாய பொருட்காட்சிஒன்று நிகழும் வைகாசிமாதம் 23-ந்திகதிமுதல் அடுத்துநிகழும் ஆனிமாதம் 24-ந்திகதிவரையிலே நடைபெறவிருக்கின்றது. இதிலே கைத்தொழில்–விவசாயப் போட்டிகள், கண்கவர் களியாட்டுவிழாக்கள் ஆதியனவும் இடம்பெறுமெனத் தெரியவருகிறது.

## தமிழ்மக்களுக்கு எச்சரிக்கை

திருகோணமலையிலே சென்றஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒருபொதுக் கூட்டத்திலே தமிழரசுக்கட்சியின் தலைவரான திரு. என். இராசவரோதயம் அவர்கள் பேசியபோது: கம்யூனிஸ்தகட்சி தனதுகொள்கையை அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பதைக் கண்டித்து, கம்யூனிஸ்தர்கள் ருஷியாவிலிருந்து உத்தரவுகளைப் பெற்றுவருவதால் அவர்களைநம்பக்கூடாதெனக் கூறலாயினர்.

## மன்னரில் இறங்குதுறை

மன்னர்ப்பகுதியிலே விமான இறங்குதுறைஒன்றை அமைப்பதற்கென மன்னர்ப் பட்டினத்திலிருந்து ஐந்துமைல் தூரத்திலுள்ள நாகதாழ்வுக்கிராமத்தில் சமபுற்றரையான பிரதேசத்திலே சுமார் இரண்டுமைல் சுற்றளவான பகுதி தகுதியெனக்கண்டு அளந்து கணக்கிடப்பட்டிருக்கிறது.

## அரசாங்க எண்ணெய் வர்த்தகம்

சென்ற சனிக்கிழமைகாலை 10மணிக்கு அரசாங்கத்தின் எண்ணெய்வர்த்தகம் ஆரம்பமானது. கொலன்னுவையில் அமைக்கப்பட்டுள்ள பெற்றோலியம் கார்ப்பரேஷன் எண்ணெய்விநியோகவேலைகளைப் பிரதமர் ஆரம்பித்துவைத்தார். அங்கே கியூவரிசையில் நின்றுகொண்டிருந்த 25 எண்ணெய்த் தாங்கிவண்டிகளின்சாவிகளை அவற்றின் சாரதிகளிடம் அவர் கையளித்ததும் அவைகள் அரசாங்கத்தினுல் எடுக்கப்பட்ட 108 பெற்றோல்விநியோக நிலையங்களுக்கும் பெற்றோல் எடுத்துச் சென்றன. காங்கேசன்துறைக்கும், கல்லோயாவுக்கும் றெயின்வண்டி மூலம் பெற்றோல் அனுப்பிவைக்கப்பட்டது.

---

● ஐப்பானின் தேசியதினம் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படலாயிற்று. அன்றுதினமே இடையீடின்றித்தொடர்வரிசையில்வந்த அதன் 24-வது மன்னரான இப்போதைய ஹிரோஹிதோ சக்கிரவர்த்தியின் 61-வது பிறந்ததினமுமாகும். இற்றைக்கு 37வருடங்களின்முன்னே அவர் சிம்மாசனமேறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### வைகாசி மாதம் — 1962

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | ஞா. | 2 | பாஸ்காவின்பின் ?-ம் ஞாயிறு (வி. ம.) | வெ |
| 7 | தி. | | அர்ச். ஸ்ரனிஸ்லோஸ் | சி. |
| 8 | செ. | ம | காலதினம் (ஞாயிறு பூசை) | வெ. |
| 9 | பு. | | அர்ச். நசியான்சென் கிறகோரியார் | வெ. |
| 10 | வி. | | அர்ச். அந்தோனீனஸ் (அர்ச். கோர்டியான், தோழர் ஞா.) | வெ. |
| 11 | வெ. | 2 | அப்போஸ்தலரான அர்ச். பிலிப்புவும், யாகப்பரும் (வி. ம.) | சி. |
| 12 | சனி | | அர்ச். நேரியூஸ், தோழர் | சி. |

சத்திய வேத
பாதுகாவலன்

1962-ம் ஆண்டு
வைகாசிமாதம் 6-ந் திகதி

## மாதாவின் வணக்கமாதம்

நமதுஆபத்துகள், அவசியங்களிளெல்லாம் எங்கள்சீவமே, எங்கள் தஞ்சமே, கிருபாகரியே, தயாபரியே என்று இருகரமெடுத்து ஆருதவியை நாடி அபயமிட்டுநிற்கும் மாதாவின் வணக்கமாதம் பிறந்திருக்கின்றது. உலகிலோ, உள்நாட்டிலோ மக்கள் சமாதானத்தைக் கண்டடையாது, அமைதியைக்கண்டுகொள்ளாது மனநிம்மதியற்றிருக்கும் ஒருசந்தர்ப்பத்திலே மாதாவின்வணக்கமாதம் பிறந்திருக்கிறது. புஷ்பங்களின்மாதமென்று சிறப்பாக அறியப்படுகின்ற இம்மாதம் பரலோகத்திலிருந்து வரப்பிரசாதபுஷ்பங்கள் மழைபோலப் பொழியப்படும் மாதம். ஏனெனில், இதுவரப்பிரசாதங்களின் இராக்கினியாகிய நமது பரலோகஅன்னைக்கு நேர்ந்துகொள்ளப்பெற்றமாதம். அதனுற்ருன் மாதாவின் மக்களாகிய நாமெல்லாம் இக்தமாதத்திலே நம்மாலானமட்டும் அவரைவிசேஷவிதமாக வாழ்த்தித் துதிக்கிறோம்.

கபிரியேல்சம்மனசானவரும், எலிசபேத்தம்மாளும்கூறிய மங்களவார்த்தைகளாலே — ஆசிவார்த்தைகளாலே — அதாவது 'பிரியதத்தத்தினலே பூரணமரியாயே வாழ்க; கர்த்தர் உம்முடனே, ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்நீரே, உம்முடைய திருஉதரத்தின் கனியாகியயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவராமே' என்று அவரைப்போற்றி வணங்குகிறோம். நாம் செபமாலைசொல்லும்தோறும் இந்தப்புகழ்மாலையையே அவரின்பாத மலர்களில் பலமுறைசாற்றுகின்றோம். அதனைத்தொடர்ந்து நமக்காக மன்ருடும்படி அவரை இரந்துவேண்டுகின்ரோம். ஆம், மாதாவின்மாதம் நமக்கெல்லாம் ஆனந்தம்பயக்கும் ஒருபாக்கியமான மாதம். "வந்ததே வணக்க மாசம் — மரியாயின்மாசமே — சந்தோஷமாய் வந்தெல்லோரும்—தாயாரைப் புகழ்வீரே" என்று அன்பு பெருக, உள்ளமுருக, இன்பகரமாகாப்பாடிக் கத்தோலிக்கஉலகமுழுவதும் ஆனந்தமுழக்கஞ்செய்து ஆர்வத்துடன் கொண்டாடுகின்றமாதம். இந்தமாதத்தில்வரும் ஒவ்வொருநாளும் மாதாவின்மக்களுக்கு ஒவ்வொருதிருநாளாகும். இந்தமாசத்திலே அவர்களின் இல்லமும், ஆலயங்களும் மாதாவுக்குக் [illegible]ண்பிக்கும் விசேஷபக்திபற்றுதலால் அதிகமாகச் சிறந்துபரிமளிக்கும் ஒவ்வொரு பெருநாளாகும்

மாதாவின் அன்பைப்பெற்ருல், அவர் நமதுதஞ்சமாய்இருந்தால் நாம் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை. அவர்நமக்காகப் போராடுவாரானல், நாம் வெற்றியிலே அவநம்பிக்கைபடவேண்டியதில்லை. அவர் நமக்காகப் பரிந்துபேசுவாரானல் நாம் கண்டடையாமற்போகும் நன்மை யாதொன்றுமில்லை. அவர் நம்மைஇரட்சிக்க மனங்கொள்வாரானல் நமது இரட்சணியத்தைப்பற்றிக் கிஞ்சித்தேனும் நாம் கலங்கவேண்டியதில்லை. மாதாவின்பிள்ளை ஒருபோதும் கெட்டுப்போகாது. நாம் இந்தவணக்க மாதத்தைச் சிறப்பாய்க் கொண்டாடுவது, மாதாவில் நாம்கொண்டுள்ள பக்திக்கு ஓர்உரைகல்லாகும் எனக.

---

## மேதின விழா

யாழ்நகரிலே கத்தோலிக்கமக்கள் மேதின விழாவைச் சென்றசெவ்வாய்க்கிழமை கோஷங்களோ, போலிவேஷங்களோ இல்லாது பக்திச்சிறப்பாகவும், ஞானப்பரிமளிப்பாகவும் கொண்டாடினுர்கள். விழாவின்நடுநாயகமாகத் தொழிலாளியும், தொழிலாளர்களின் பாதுகாவலருமான அர்ச். சூசையப்பர் திகழலாயினர். விழாவின் ஆரம்ப திரிதின ஆராதனைகள் அர்ச். செபஸ்தியார் கோவிலிலே விமரிசையாக நடைபெறலாயின. விழாநாளன்றுகாலை ஆசனக்கோவிலிலே பெருந்திரளான தொழிலாளரும், பிறரும்சமுகமாக நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் திவ்வியபூசை நிறைவேற்றிப் பிறர்சிநேகம், சகோதரத்துவம் ஆதியனபற்றிப் பெரிதும்உணர்ச்சிபெருக அரியதோர் பிரசங்கம்செய்தனர். அதன்மேல் சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில்நிகழ்ந்த சல்லாபமும், ஆசனக்கோவிலில் நிகழ்ந்த திருமணித்தியால ஆராதனையும் விழாவின் குறிக்கோளிலே முக்கியத்துவம் பெறலாயின. பின்னர் பிற்பகல் 5மணிக்குப் பாஷையூர் அர்ச். அந்தோனியார் கோவிலிலிருந்து விழாநாயகரானசூசைமாமுனிவரின் திருச்சுரூபமானது அழகேமயமாகக் காட்சியளித்த சிங்காரவாகனத்தின் மீது மக்கள்குழாங்களின் செபவோசைகள், சங்கீதவோசைகள் மத்தியிலே அலங்காரமுற்றுவிளங்கிய நகர் வீதிகள்வழியாய் ஓட்டோலகமாய்ப் பவனிவந்தகாட்சியோ பகருந்தரமன்று.

ஐந்துமைல் தூரத்துக்குமேல் ஞானஆடம்பரமாக நடந்தேறிய திருப்பவனியானது கடைசியாக இரவு 7மணிக்குக் கடலணைமைதானத்தை அடைந்து, அங்கே மன்னர் மன்னவரின் மணிமாடம்போல் காட்சியளித்து, மின்சாரதீபங்களால் பிரபைகாலித்துத் தேசோமயமாய்விளங்கிய அழகியமண்டபத்திலே, சனசமுத்திரம்போல் குழுமியிருந்த மக்களெல்லாம் அஞ்சலிசெய்து மாதவவளனுரை மனேகரமாக வரவேற்றுநின்ருர்கள். அதன்மேல் மேதினவிழாபற்றிய சொற்பொழிவொன்று சிறப்பாக நிகழ்த்தப்பட்டு, கத்தோலிக்க தொழிலாளரை அர்ச். சூசையப்பருக்கு ஒப்புக்கொடுக்கும் செபம்வாசிக்கப்பட்டு, மேற்றிராணியாண்டவர் அவர்களால் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பெற்றதும் விழா இனிதே நிறைவாயிற்று. கத்தோலிக்க தொழிலாளர் சங்கம் இம்முறையும் முன்னின்று விழாவைச்சிறப்புச்சிறப்பாய் நடாத்தியமை பாராட்டத்தக்கதே.

# பேசும் பேனு

### புதினம் தரும் புதினம்

புதினம்: யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வாரஏடு சுவையானசெய்திகளை ஒன்றுதிரட்டித்தருகின்றது. அண்மையில் வெளியான புதினத்தில் பாப்பரசர்பற்றிய செய்தியொன்றைப் படித்தேன். யான் சுவைத்ததை நீங்களும் ரசிக்கவேண்டுமல்லவா?

எங்கள் பரிசுத்ததந்தை பாரிஸ்நகரில் பாப்புவின் தானுபதியாகக் கடமையாற்றியபோது நடந்தநிகழ்ச்சி அது. காதினல் ஔங்காலலி (இன்றைய பாப்பு) பிரதான விருந்து வைபவமொன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தார். விருந்தினர்களில் கர்தினலின் மனதை அதிகம் கவர்ந்தவள் ஆபாச ஆடையணிந்திருந்த நங்கையொருத்தியே. அவளைச் சிலநிமிடங்கள் உற்றுநோக்கிய கர்தினல் பணியாளன் ஒருவனிடம் ஒரு அப்பிள்பழத்தைத்தந்து அந்நங்கையிடம் கொடுக்கச்செய்தார். நாகரீகநங்கை தனக்குப்பழத்தை அன்பளிப்புச் செய்த கர்தினலாண்டவரை ஆச்சரியத்துடன் கவனித்தாள். வருங்கால பாப்பு மிக அமைதியாகக் கூறினர்: **"ஏவாள் விலக்கப்பட்ட பழத்தைசாப்பிட்டபின்னர்தான் தான் நிர்வாணமாக இருப்பதை உணர்ந்தாள்."** அந்த ஆபாசஉடையலங்காரி தன்னை நோக்கிக் கூறப்பட்ட வார்த்தைகளின் கனகனத்தை உணர்ந்துகொண்டாள். அவ்விடத்தை விட்டு உடனடியாக வெளியேறினுள். சிறிது நேரங்கழித்து மரியாதையான ஆடையணிகளுடன் வைபவத்தில் மீண்டும் பங்குபற்றினுள்.

### நகைச்சுவை

ஆசிரியர் ஞானுபதேச வகுப்பில் இஸ்பிரித்துசாந்துவைப்பற்றியும், அவர் திரித்துவத்தின் மூன்ருவதுஆள் என்பதுபற்றியும் மாடப்புருவின் உருவத்தில் அவர் சித்திரிக்கப்படுகிறுர் என்பதுபற்றியும் விளக்கினர். பின்னர் வினவினர். இஸ்பிரித்துசாந்து என்பவர் யார்? பீற்றர் உடனே பதிலளித்தான்: இஸ்பிரித்துசாந்து ஒருபறவை.

### ஐக்கிய திருச்சபை

நம் திருமறையின் கொள்கைகளைச் சாதாரணகத்தோலிக்கர்களும் அறிந்துகொள்ளத்தக்க இயக்கங்கள நடாத்தப்படவேண்டுமென இப்பகுதிகளில் முன்னர் குறிப்பிட்டிருந்தோம். கடந்த 29-4-62 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30மணிதொடக்கம் பண்டத்தரிப்பு புனிதஜசிந்தா பாடசாலை மண்டபத்தில் மேற்படி கிராமத்தைச்சேர்ந்த ஆண்கட்கான மரியாயின் சைனியத்தாரின் ஆதரவில் பத்திரிசிய இயக்கக் கூட்டமொன்று நடைபெற்றது. இக் கத்தோலிக்க கல்விக்கருத்தரங்கில் வண. சுவாமி தியோகுப்பிள்ளை அவர்களும், பேறிஞர் பி. சவிரிமுத்து அவர்களும் "ஐக்கிய திருச்சபை" என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்தினர்.

நம் மேற்றிராசனத்தின் கிராமங்கள் தோறும் இதுபோன்ற பத்திரிசிய இயக்கக்கூட்டங்கள் நடாத்தப்படுதல் நலமென்பதை இங்குமீண்டும் குறிப்பிட விரும்புகிறேம்.

### நவீன நூதனசாலை

எமக்குப் பலவருடங்கட்குமுன்னர் வசித்தோர் தம்காலத்தில் எவ்வித வாழ்க்கையை நடாத்தினர் என்பதை இனறும், வருங்காலத்திலும் துலாம்பரமாக எடுத்துக்காட்டுபவைகள் நூதனசாலைகளே. ஒவ்வோர்நாட்டிலும் ஆட்சியாளர்கள் பெரும்பொருட்செலவில்இச்சாலைகளைப் பரிபாலித்துப் பண்டைக்காலத்திய பொருட்களைத்தையும் வருங்காலத்தோரும் கண்டுகளிக்கும் வண்ணம் பாதுகாத்துவருகின்றனர்.

ஜேர்மனியில் டான்யூப் நதிக்கரையில் அமைந்துள்ள எல்ப் என்னுமிடத்தில் ஐரோப்பியரின் பிரதான உணவான ரொட்டிகளைப்பற்றிய விடயங்களைமட்டுமே கொண்ட நூதனசாலையொன்றுண்டு. ரொட்டியை மனிதன் உண்ணத்தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை எவ்வித அமைப்புகளில், எவ்வித உருவங்களில் அது விளங்கியதென்பதையும், அவைபற்றிய ஆராய்ச்சிகளையும் ரொட்டிகள் சம்பந்தமான புத்தகங்களையும், இன்னும்பல அம்சங்களையும் இந்த நூதனசாலையில் கண்டுகளிக்கலாம். மிகப்புராதன காலத்திலிருந்து இன்றுவரை ரொட்டிகளைத் தயாரிக்க உதவும் உபகரணங்களையெல்லாம் அறைகளில் வரிசைப்படுத்தியிருக்கிறுர்கள். ரொட்டிகளை நவீன வேலைப்பாடுகளுடன் எவ்விதம் தயாரிக்கலாம் என்ற குறிப்புகளும் இங்கு விளக்கப்படுகின்றன.

---

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### வைகாசி மாதம்

**பொதுக்கருத்து:** கத்தோலிக்கருக்கும், பிரிந்திருக்கும் கிறீஸ்தவர்களுக்குமிடையே அதிகமான மதிப்பும், இன்னும் நுணுக்கமான விசாரணைகளும் உண்மை ஒற்றுமைக்காகிய வழியை ஆயத்தம்பண்ணத் தக்கதாய் வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** திவ்விய நற்கருணைமேல் நமக்கிருக்கும் ஆழமான பக்தியானது மிஷன் நாடுகளிலே குருத்துவ, சந்நியாச அழைத்தல்களை அதிகரிக்கச்செய்யுமாறு மன்ருடிக்கொள்வது.

* * *

**காலைக்காணிக்கைச் செபம்**

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அச்சிய[illegible]ன் மாசில்லாத இருத[illegible], உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன.

---

● இவ்வருடம் ருஷியபிரிவினைச் சபையின் பாஸ்குத்திருநாள் ஒருவேலைநாளாய் இருக்குமென்று சோவியற்அரசாங்கம கட்டளைபிறப்பிக்கலாயிற்று. இதற்குக்காரணம், "தொழிலாளர்களின்விருப்புகளை நிறைவேற்றுவதே" என்றும் அது தெரிவித்துள்ளது. ருஷிய பிரிவினைச்சபை மேற்குநாடுகளில் கொண்டாடும் பாஸ்குத்திருநாளிலிருந்து ஒருவாரம்பிந்தியே அதனைக் கொண்டாடுகிறது.

● சென்ற26-ந்திகதியன்று சந்திரனைச் சென்றடைந்த அமெரிக்க ஞெக்கற்-அதாவது ஏவாயுதத்தைத் தயாரித்தவிஞ்ஞானிகள் வருகிறகோடைகாலத்திலே சுக்கிரனை நோக்கி அனுப்பவிருக்கும் ஏவாயுதம்ஒன்றைத் தயாரிக்கும்பணியில் இப்போதே ஈடுபட்டுள்ளார்கள். இந்தஏவாயுதம் பூமியிலிருந்துபுறப்பட்டு நான்குமாதப் பிரயாணத்தின்பின்னரே சுக்கிரனைச் சென்றடையுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-ம் வத்திக்கான் திருச்சங்கத்தின் சித்திக்காகச் செபம்

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே! உமது பிரசன்னத்தினாலும், உறுதியான வழிநடத்துதலினாலும் திருச்சபையோடு என்றுமிருக்கும்படி யேசுவின் நாமத்தினால் பரமபிதாவினால் அனுப்பப்பட்டவரே! திருச்சபையின் பொதுச்சங்கத்தின்மேல் உமது நிறைவான வரங்களைப் பொழிந்தருளும்படி தேவரீரை இரந்து மன்றாடுகிறோம்.

எமது மதுரமான ஆறுதலும், ஆசிரியருமானவரே! பரிசுத்த பாப்பரசரின் அழைப்புக்கிணங்கி உரோமாபுரியில் திருச்சங்கங்கூட மகிழ்ச்சியுடன் வந்துசேரும் ஆயர்களின் மனதுகளை உமது தெய்வீக பிரகாசத்தால் நிரப்பியருளும்.

இத்திருச்சங்கத்தின் விளைவாகச் சுவிசேஷத்தின் ஒளியும், பலமும் உலகமக்களிடையே அதிகமதிகமாய்ப் பரவவும், கத்தோலிக்கவேதமும் அதைப்பரப்பும் பணியும் இனிதே வளம்பெறவும், திருச்சபையின் போதனையும், நல்லொழுக்க வழிகாட்டுதலும் எல்லோராலும் பூரணமாய் ஒப்புக்கொள்ளப்படவும் வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

எமது ஆத்துமத்தின் மதுரமான வழிகாட்டியே! நாங்கள் மனத்தாழ்ச்சியும், அமைச்சலும் உள்ளவர்களாயிருக்கவும் திருச்சங்கத்தின் முடிவுகளை நன்றிநிறைந்த மனதுடன் ஏற்று, அனுசரிக்க ஆசைப்படவும் எங்கள் மனதைச் சத்தியத்தில் உறுதிப்படுத்தியருளும்.

கிறிஸ்துநாதருடைய பெயரில் பெருமை பாராட்டிக்கொண்டு அவரால் நிறுவப்பட்ட ஏகமந்தையைவிட்டு இன்னும் பிரிந்து நிற்பவர்கள் கடைசியாய் ஒரே மேய்ப்பனின்கீழ் ஒற்றுமையைக் கண்டடையச் செய்தருளும்படி மன்றாடுகிறோம்.

முன்னொருநாள் பெந்தெக்கோஸ்துதினத்தில் தேவரீர் புரிந்த அற்புதங்களை எங்கள் காலத்திலும் இன்னொருமுறை செய்தருளும்படி கெஞ்சி மன்றாடுகிறோம். உமது திருச்சபை யேசுநாதருடைய தாயாரான பரிசுத்த கன்னிமரியம்மாளுடன் தளராத வேண்டுதலில் ஒன்றித்திருப்பதாலும், அர்ச். இராயப்பரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதாலும், எமது திவ்விய இரட்சகரின் இராச்சியம்—உண்மையினும், நீதியினும் அன்பினும் சமாதானத்தினும் இராச்சியம்—உலகெங்கும் பரவச்செய்தருளும் சுவாமி, ஆமென்யேசு.

குறிப்பு: இச்செபத்தைப் பத்தியுடன் செபிப்போர் அடையக்கூடிய பலன்களாவன:

1. பத்துவருட அபூரணபலன். (ஒவ்வொரு முறையும்)
2. நாள்தோறும் ஒருமாதமளவாகச் செபித்தால் (வழமையான நிபந்தனைகளுக்கிணங்க) ஒரு பரிபூரணபலன்.

## உங்களுக்குத் தெரியுமா ?

— தொகுப்பு: சா. பெ. —

- இவ்வருடம் ஐப்பசிமாதத்தில் பரிசுத்த தந்தை இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்தைப் புனித இராயப்பர்மகாலயத்தில் ஆரம்பித்துவைப்பார். இவ்வைபவத்துக்கென இம்மகாலயம் ஒரு மகாநாட்டு மண்டபமாக மாற்றியமைக்கப்படும்.
- கர்தினால்கள், பிதாப்பிதாக்கள், மேற்றிராணிமார்கள், குருக்கள், இல்லறத்தவர்களாக இரண்டாயிரத்துக்குமதிகமானோர் இப்பொதுச்சங்கத்தில் கலந்துகொள்வர்.
- கடந்த ஒரு நூற்றாண்டுகாலமாகப் பொதுச்சங்கம் கூட்டப்படவில்லை. அதற்குமுன்னர் 20 பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டுள்ளன.
- முதலாவது வத்திக்கான் பொதுச்சங்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது (1870-ல்) கரிபால்டியின் தேசியவீரர்கள் உரோமையைத் தாக்கியபடியால் அச்சங்கம் ஒத்திவைக்கப்பட்டது.
- மற்றைய பொதுச்சங்கங்கள் வத்திக்கானுக்கு வெளியே நடாத்தப்பட்டபடியால் அவை அவ்விடங்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன.
- முந்திய சங்கங்களில் திருச்சபையின் சத்தியங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. கொள்கைகள் ஆராயப்பட்டன. சத்திய திருச்சபைக்குக் கேடுவருவித்தோர் பகிரங்கமாக அகற்றப்பட்டனர். பாப்புவின் வழுவாவரம் தாபிக்கப்பட்டது.
- பதின்மூன்றும் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் நடாத்தப்பட்ட இரு பொதுச்சங்கங்கள் கிறிஸ்தவ ஒற்றுமைபற்றிய சில நடபடிக்கைகளைக் கையாண்டதன்விளைவாகக் கிரேக்க ஓதோடெக் சபையார் சில கொள்கைகள் சம்பந்தமாகத் திருச்சபையுடன் ஒற்றுமைகொண்டனர்.
- 1958-ல் தாம் பாப்புவாக உயர்த்தப்பட்டதன்பின்பு அருளப்ப தந்தை பொதுச்சங்கம் கூட்டும் யோசனையை வெளியிட்டார். எண்பதுவயதுடைய 23-ம் அருளப்பர் தமது தள்ளாப்பராயத்திலும் திருச்சங்கத்துக்கான பூர்வாங்க அலுவல்களில் உற்சாகமுடன் உழைத்துவருகிறார்.
- ஒரு திருச்சங்கத்துக்குத் தலைமைதாங்கி நடாத்துபவர் பாப்பரசரே. பொதுச்சங்கம் கூட்டப்பட்டபின் பாப்புவுக்கு மரணம் சம்பவிக்குமாயின் சங்கம் கலைக்கப்படும். கலைக்கப்பட்ட சங்கத்தின் தீர்மானங்கள் எதுவும் செல்லுபடியாகா.
- பொதுவாகத் திருச்சபையை எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், சிறப்பாகத் தங்கள் மேற்றிராசனங்களில்எழும் சிக்கல்களையும் பற்றி விவாதிக்க மேற்றிராணிமார் பொதுச்சங்கத்துக்கு விண்ணப்பங்கள் அனுப்புவர். ஆயின் பொதுச்சங்கம் உத்தியோகரீதியில் ஆரம்பிக்கப்படும்வரை நிகழ்ச்சிநிரல் வெகுஇரகசியமாகக் காப்பாற்றப்படும்.
- முதலாவது பொதுச்சங்கம் நிக்காயா என்னுமிடத்தில் 325-ல் ஆரம்பமாயது. இச்சங்கம் விசுவாச உச்சாடனத்தை அங்கீகரித்துத் திவ்விய பூசைவேளைகளில் அதைச் செபிக்க உத்தரவிட்டது.
- லையன்ஸ் நகரில் 1245-ல் நடாத்தப்பட்ட பொதுச்சங்கத்தில் நாலாம் இன்னொசெந் பாப்பு ஜெர்மானிய சக்கரவர்த்தியான இரண்டாவது பிரெட்ரிக் அரசரை மதப்பிரஷ்டம் செய்தார்.
- பதினாறுவது நூற்றாண்டில் ரென்ற்நகரில் கூடிய திருச்சங்கம் முக்கியத்துவம்வாய்ந்தது. சமயச் சீர்திருத்தப்புரட்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தகாலம் அது. இச்சங்கத்தில் திருச்சபையின் வேதாகமங்கள், கொள்கைகள், சட்டப்பிரமாணங்கள் யாவும் அலசி ஆராயப்பட்டுள
- முதலாவது வத்திக்கான் பொதுச்சங்கத்தில் ஒன்பதாவது பத்திநாத பாப்பரசர் பாப்புமாரின் வழுவாவரக்கொள்கையைப் பிரகடனப்படுத்தினார்.
- இவ்வருடத்திய சங்கத்தில் பொதுவுடைமையின் எதிர்ப்புகள், சாதிநிற வேற்றுமைகள், கிறிஸ்தவ ஒற்றுமை, அணு ஜலவாயுக்குண்டுகள் முதலிய பிரச்சினைகள் முக்கியத்துவம் பெறலாமென எண்ணப்படுகின்றது.

### புத்தக மதிப்புரை

தினசரி செபத்தில்
அர்ச். இஞ்ஞாசியாரின்

## ஞானமுயற்சிகள்

ஆக்கியோன்: அலோசியஸ் அம்புரூஸி, சே. ச., சவேரியார் பதிப்பகம், கள்ளிக்கோட்டை.

கிடைக்குமிடம்: சென் மைக்கல் புத்தகசாலை, ஜெம்பற்ருவீதி, கொழும்பு—13
விலை ரூபா 2.

யேசுசபையை ஸ்தாபித்தவரான அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் அருளிச்செய்த "ஞானமுயற்சிகள்" என்ற சிறந்தபக்திநூலைக் குருமாரும், துறவிகளும நன்கு அறிவார்கள். ஞானொடுக்க காலங்களில் அந்நூலைஉபயோகித்து ஞானநன்மையையும் அடைந்திருப்பார்கள். அர்ச். இஞ்ஞாசியாரின் ஞானமுயற்சிஎன்றநூல் ஞானஒடுக்க காலங்களுக்கு மட்டுமுரிய நூலன்று. அதை நாளாந்த செபத்திலும் குருமாரும், துறவிகளுமட்டுமல்ல, சாதாரண கிறிஸ்தவர்களுமே உபயோகித்துப் பயனடையலாமென்று காட்டுவதற்காக இந்தியாவில் பல்லாண்டுகளாக திருத்தொண்டாற்றிவந்த வண. அலோசியஸ் அம்புரூஸி, சே. ச. சுவாமிகள் ஆங்கிலத்தில் அர்ச். இஞ்ஞாசியாரின் "ஞானமுயற்சிகள்" என்ற நூலை இலகுவாகவிளக்கி ஒருசிறியநூல் எழுதினார். அந்நூலின் மொழிபெயர்ப்பே "தினசரிசெபத்தில் அர்ச். இஞ்ஞாசியாரின் ஞானமுயற்சிகள்" ஆகும். அந்நூல் மலையாளத்திலும், வேறு இந்தியபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தியானம்செய்தல் என்றால் என்ன என்று அறியாத சாதாரண கிறிஸ்தவர்கள்கூட இந்நூலைஉபயோகித்து, நன்றாகச் செபம்செய்வதற்கு உதவியாக ஆரம்பத்தில் இலகுவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. தியானத்திற்குரிய விடயங்களை மனக்கண்முன் நிறுத்துவதற்குதவியாக அழகான சித்திரங்களும் தரப்பட்டுள்ளன. தங்கள் நாளாந்தசெபத்தில் இந்நூலை உபயோகிப்பதினால் இல்லறக்கிறிஸ்தவர்களும், துறவிகளும்கூட ஏராளமான ஞான நன்மைகளை அடைவார்கள் என்பது எமது நம்பிக்கை.

இச்சிறந்தநூலின் பிரதியொன்றை எமக்கு அனு[illegible] விநியோகஸ்தர்க[illegible] நன்றிகூறுகின்றோம்.

— ஆசிரியர்

### செஞ்சீனவின் தந்திரம்

வடஇந்திய லடாக்பிரதேசத்தில் சீனர்கள் பின்னரும் உள்ளிட்டுவந்து அங்கே புதியஇராணுவநிலையம் அமைத்திருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இத்தகைய செயல்களால் சீனர்கள் இந்தியாவைப் பெரும்போர்ஒன்றில் வலிந்திறங்கச்செய்யத் தூண்டிவருகிறார்கள் என்பது தெளிவாகின்றது. இதற்குக் காரணமில்லாமலில்லை; சென்ற மூன்றுஆண்டுகளாகச் சீனவிலே காலமழைபெய்யாது விவசாயம் படுமோசமாக வீழ்ச்சியடைந்து, அதனால் நாட்டிலே கடும்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து சீனத்தலைவர் மாசேதுங்கின் திட்டம வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இன்னும் ரூஷியா பொருளாதார — தொழில் நுட்ப உதவிகளைச் சீனவுக்குச்செய்வதை நிறுத்திவிட்டதுடன் அதற்குக்கொடுத்த கடன்களை அறவிட்டும், உதவிய தொழில்நுட்ப நிபுணர்களைத் தருவித்தும் வருகிறது. மேலும், பொதுவுடைமைக் கொள்கைவித்தியாசமும், கம்யூனிஸ்த தலைமைப்போட்டியும் இருநாடுகளுக்குமிடையே வலுத்துவருவதுமாகிய இவைகளெல்லாம் சீனவுக்குப் பெரும் இக்கட்டான நிலைமையை உண்டுபண்ணிவிடவே, உள்நாட்டு நெருக்கடியை மறைத்துச் சமாளிப்பதற்காக மக்களின் மனதை வேறுதிசையில் அதி திருப்பிவிடவேண்டிய அவசியம் நேர்ந்திருப்பதே அதன் இந்திய சுரண்டலுக்குக் காரணமென்று நம்ப வேண்டியிருக்கிறது.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

### குருஷேவைப் பாராட்டுகின்றார்

"ரூஷியபிரதமர் குருஷேவுக்குப் போரில் விருப்பமில்லையென்று நான் அறிவேன். அணுஆயுதக்கொடுமைகள் பற்றி அவர் நன்கறிவார் மேற்கத்திய நாடுகளுக்குத் திருப்திகரமான ஒருமுறையிலே ஒருவருடகாலத்தில் பேர்லின்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுவிடும்; அமெரிக்காமீது எனக்கு ஆத்திரமோ, வெறுப்போ இல்லைஎன்றார். அடுத்த பத்துவருடகாலத்தில் உலகம் அடையக்கூடிய முன்னேற்றத்தின்மீது அவருக்கு மிகுந்தநம்பிக்கை உண்டு. குருஷேவ் ஸ்ராலினிலும்பார்க்க மிகவும் வேறுபட்ட ஒருமனிதர். அவர் நகைச்சுவையோடு அதிகம்சிரித்துப் பேசினார். சிந்தனையுள்ள கவனமான ஒருமனிதர்அவர். என்னோடு பேசிய பொழுது அவர் தனதுகருத்தை அமெரிக்கமக்களுக்குத் தெரியப்படுத்துவதில் [illegible]எடுத்துக்கொண்டார். அவர்களின் நல்லெண்ணத்தைப்பெற முயன்றார்" என்று சிலதினங்களின்முன் மஸ்கோநகரிலே அவரைப்பேட்டிகண்ட அமெரிக்க பத்திரிகைகள் பலவற்றின் பிரசுரகர்த்தாவான திரு. காடனல் கவுல்ஸ் லண்டனிலும், நியூயோக்கிலும் தெரிவித்திருக்கின்றார்.

* * *

- அருளப்ப பாப்பரசர் சமீபத்தில் நான்குபுதிய ஆபிரிக்க அதிமேற்றிராணிமார்களை நியமனஞ்செய்ததோடு தற்போது [illegible]பிரிக்காவிலே நிகிறோவர் எனப்படும் காப்பிரிசாதியைச் சேர்ந்த அதிமேற்றிராணிமார்களாய்ப் பன்னிருவர் இருக்கின்றார்கள்.

மனச்சஞ்சலத்திற்கு இடங்கொடாதே. ஏனெனில், மன அமைதியில்லாவிடில் நீ சர்வேசுரனோடு பேசமாட்டாய். நம்பிக்கையும் தளர்வடையும், நீ தேவ ஊழியத்தில் குளிர்ந்தவனாய் அசமந்தமுள்ளவனாய்ப் போகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதவைராக்கியமும் கத்தோலிக்க சேவையும்

[இலங்கைக் கத்தோலிக்கசங்கத்தால் வெளியிடப்பட்ட "திருச்சபை அரசாங்கம், கத்தோலிக்கசேவை" என்ற வெளியீட்டைத்தழுவி எழுதப்பட்டது]

"நீங்கள் போய் எல்லாச் சாதியாருக்கும் போதியுங்கள்" என்று நமது ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துநாதர் தமது அப்போஸ்தலருக்குக் கொடுத்த கட்டளை கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த எல்லோர்மேலும் சுமத்தப்பட்டகடனே.

இந்த அப்போஸ்தலிக்க சேவை பண்டுதொட்டு இன்றுமட்டும் ஆண் பெண் என்ற பேதமின்றி எல்லாக் கத்தோலிக்காலும் எல்லா நாடுகளிலும் புரியப்பட்டு வந்திருக்கின்றது. சின்னப்பர் தமது நிருபங்களில் ஆதிக்கிறிஸ்தவர்கள் தமக்குப் பக்கபலமாயிருந்து சுவிசேஷப் பாப்புதற்பணியில் ஈடுபட்டார்கள் என்று எடுத்துக்கூறியிருக்கிறார். அர்ச். யோண் கிறிஸ்சோஸ்தம் (4-ம்நூற்றூண்டு) இச்சேவையின் அத்தியாவசியத்தைத் தமதுவிசுவாசிகளுக்கு எடுத்து விளக்கியிருக்கிறார். அவர் "பிறருடைய ஈடேற்றத்துக்காக உழையாதவன் எவனும் இரட்சணியம் அடைவான் என்பதை என்னால் நம்பமுடியாமல் இருக்கிறது" என்று கூறியிருக்கிறார்.

அப்போஸ்தலிக்க சேவையின் தன்மையைப்பற்றியும் அதன் அத்தியாவசியத்தைப்பற்றியும் இந்நூற்றூண்டின் ஆரம்பத்தில் (1905) அர்ச். பத்தாம் பத்திநாதபாப்பரசர் ஒரு விசேஷ சுற்றுநிருபத்தில் எடுத்து விளக்கியிருக்கிறார். அவருக்குப்பின் திருச்சபையை ஆண்டுவந்த 11-ம் பத்திநாத பாப்பரசரும், 12-ம் பத்திநாத பாப்பரசரும் கத்தோலிக்க சேவையைப் பற்றி நன்கு வற்புறுத்தியிருக்கின்றனர்.

கத்தோலிக்க சேவையின் முதுகெலும்பு தேவசிநேகத்திலிருந்து பிறக்கும் பிறர்சிநேகம் என்றுகூறின் மிகையாகாது. "உன்னைப்போல் உன் பிறத்தியானையும் நேசிப்பாயாக" என்று ஆஞ்ஞாபித்த தேவனின் கட்டளையை நிறைவேற்றுவதுதான் கத்தோலிக்க சேவை. பிறர்சிநேகத்தால் உந்தப்பட்டு, ஆத்மீக சரீர உதவிகளைப் பிறருக்குத் தேவனின் பொருட்டுச் செய்வதே கத்தோலிக்க சேவை. அதன் நோக்கம் சற்றும் அரசியற்தன்மை உடையது அன்று. பசியாயிருக்கிறவர்களைப் போஷிப்பதோ, உடையற்றவர்களுக்கு வஸ்திரங்களை அளிப்பதோ, அந்தரித்தோருக்கு இருப்பிடங்களை ஒழுங்கு செய்வதோ, வியாதிஸ்தரை வைத்தியசாலையில் வைத்துப் பாராமரிப்பதோ அன்றேல் தரிசித்தலோ, அனாதைகளைப் பாதுகாப்பதோ, அனாதை சாலைகளை நடாத்துவதோ, இவைபோன்ற தர்மக்கிருத்தியங்கள் யாவும் தேவசிநேகத்தாலும் அதன் அடியாகப் பிறந்த பிறர்சிநேகத்தாலும் செய்யப்படும் உத்தம தொண்டுகளே.

ஒருவன் தேசாபிமானத்தால் உந்தப்பட்டு எவ்வாறு தன் உடல், பொருள், ஆவியாகிய மூன்றையும் தன் நாட்டுக்காக அர்ப்பணஞ்செய்ய முன்வருகிறானே— விசேஷமாக யுத்தகாலத்தில்—அதேவிதமாக வேதவைராக்கியமுள்ள ஒருவன் தேவனை மக்கள் அறியவும் அவருடைய புனித போதனைகளை அவர்கள் அறிந்து அவற்றை அநுசரிக்கச்செய்யவும் தன் உடல், பொருள், ஆவியாகிய மூன்றையும் பரித்தியாகஞ் செய்ய ஆயத்தமாயிருக்கிறான். இது அவன்மேல் சுமத்தப்பட்ட கடமையாகவும் இருக்கிறது. யேசுநாதர் தாமே இதை எடுத்து விளக்குமாப்போல் "மனிதன் முன்பாக என்னை அறிக்கையிடுகிறவன் எவனோ, அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின்முன்பாக அறிக்கையிடுவேன். மனிதன் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரமண்டலங்களிலே இருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" (மத். 10 : 32—33) என்று வாக்குப் புண்ணியிருக்கிறார்.

விசேஷமாக இக்காலத்தில் ஜனத்தொகையின் பெருக்கத்தாலும் குருக்களின் குறைந்த தொகையாலும் சாதாரண கத்தோலிக்கர் அநேகர் இப்புனிதத்தொண்டில் கூடுதலாகப் பங்குபற்ற வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

கத்தோலிக்கசேவை இரு பொது நோக்கங்களை உடையது. முதலாவது, மக்களின் ஆத்தும இரட்சணியம். இரண்டாவது, கத்தோலிக்கர் தங்கள் தொழில் துறைகளிலும்— கர்த்தோர்களிலும் காரியாலயங்களிலும்—விளையாட்டிடங்களிலும் வியாபாரக்கடைகளிலும்—சமய அடிப்படையிலுள்ள புனித கொள்கைகளை— சத்தியம், நேர்மை, நீதி, நன்மை—புகுத்துவது. இச்சேவையானது திருச்சபையின் நோக்கங்களோடு இணைக்கப்பட்டதாயிருக்கவேண்டும். ஆகவே, கத்தோலிக்கர் செய்யும் பலவித பிறர்சிநேக முயற்சிகள் கிறிஸ்துவுக்காகக் கிறிஸ்துவில், கிறிஸ்துமூலம்— அதாவது திருச்சபையின் விதிகட்கேற்ப— செய்யப்பட வேண்டுமென்பது வெளிப்படை. ஆகவே, மேற்றிராணிமார், குருமாருடைய அங்கீகாரம் பெறாது செய்யப்படும் கத்தோலிக்க மக்களின் செயல்கள் எல்லாம் கத்தோலிக்க சேவையென்று குறிப்பிட முடியாது.

கத்தோலிக்க சேவையின் முக்கிய நோக்கம் மக்களைச் சத்தியவேத திருச்சபையில் சேர்த்து அவர்கள் ஆத்தும இரட்சணியத்தைப்பெற உதவி செய்வதே. ஆகவே, இவ்வேலை மேற்றிராணிமார், குருமாரின் ஆலோசனைகளைப் பின்பற்றியே செய்யப்படவேண்டுமென்று பெறப்படுகிறது. கத்தோலிக்க சேவைக்கு எல்லோரும் அழைக்கப்படுகின்றனர். சிலர் பகிரங்க பத்திக்கூட்டங்களில் அங்கத்துவம் வகித்துப் பணியாற்றுகின்றனர். உதாரணமாக, மரியாயின்சேனை, சென்வின்சென்ற் டீ போல் தருமசபை, தருமசீமாட்டிகளின்சபை, திருஇருதய கூட்டம், மாசில்லாதமாதாகூட்டம், திருமுகக்கூட்டம், பாலகயேசு கூட்டம், அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ் சபை, நன்மரணசபை முதலியன. ஆனால், தனிப்பட்ட முறையிலும் கத்தோலிக்கர் அப்போஸ்தலிக்கசேவை செய்யவேண்டியவர்களாயிருக்கின்றனர். அது ஐந்துவகைப்படும்.

1. கத்தோலிக்கர் செய்யும் எல்லாச் செயல்களையும் கடவுளுக்காகச் செய்தல். அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் கூறப்பட்டபடி (அதி. 10 : 31) "நீங்கள் சாப்பிட்டாலும், குடித்தாலும், வேறென்னத்தைச் செய்தாலும் எல்லாவற்றையும் சருவேசுரனுடைய தோத்திரத்துக்காகச் செய்யுங்கள்" என்பதற்கேற்ப கத்தோலிக்கர் ஒழுகவேண்டும்.

2. செபங்கள் மூலம் சருவேசுரனுடைய இராச்சியத்தை நாம் பரப்பலாம். ஒவ்வொரு முறையும் நாங்கள் பரமண்டலமந்திரம் சொல்லும் பொழுது "உம்முடைய இராச்சியம் வருக" என்று வேண்டிக்கொள்ளுகிறோமல்லவா?

3. எங்கள் பாடுகள்மூலம் அப்போஸ்தலிக்க சேவையில் ஈடுபடலாம். தபம், ஒறுத்தல், தானம், தரும செயல்கள் என்பன சிறந்த அப்போஸ்தலிக்கசேவைகளாகும். அர்ச் சின்னத்திரேசம்மாள் தமது பரித்தியாகங்கள் மூலம் அநேக ஆத்துமாக்களை மனந்திருப்பினாளென்று வாசிக்கிறோம்.

(4) எங்கள் நன்முன்மாதிரிகையால் யேசுக்கிறிஸ்துநாதரின் போதனைகளுக்கு நாங்கள் சாட்சி பகரலாம்.

(5) எங்கள் பேச்சாலும் எழுத்தாலும் பல ஆத்துமாக்களை ஈடேற்ற பாதையில் கொண்டுவந்து சேர்க்க எங்களால் முடியும். விசேஷமாக இந்தக் காலத்தில கல்வி எப்பாகங்களிலும் தீவிரமாய்ப்பரவிவர, மிகவும் துவேஷத்திற்குரிய அநேக அருவருப்பான ஆசாபாசங்களைத் தூண்டும் நூல்கள் ஆயிரக்கணக்கில் மழைக்கால ஈசல்கள்போலத் தினமும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவைக்குப் பதிலாகச் சன்மார்க்கத்திற்கேற்ற, சமய அடிப்படையில் எழுதப்பட்ட புனிதநூல்களை வெளிப்படுத்துவது கத்தோலிக்கராகிய எங்களின் கடமையாகும். கத்தோலிக்க பிரசுரத்தொண்டு எல்லா விசாரணைப்பங்குகளிலும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, அவ்வப்பகுதி மேற்றிராசனத்தில் இருக்கும் கத்தோலிக்க பத்திரிகாசிரியருக்கும், பதிப்பாளருக்கும் உறுதுணைபுரிவது அவசியமாகும். சிறப்பாகக் கூறின் இலங்கையில் வெளிவரும் சத்தியவேதபாதுகாவலன் (தமிழ்), கதலிக்மெசென்ஜர் (ஆங்கிலம்), ஞானபிரதீபய (சிங்களம்) ஆகிய கத்தோலிக்க வாராந்தப்பத்திரிகைகளை ஆதரிப்பதும், இலங்கையிலும் தென்னிந்தியாவிலுமிருந்து வெளியாகும் சிறந்த தமிழ்க்கத்தோலிக்க சஞ்சிகைகளான "கத்தோலிக்க சேவை" "இருதயத்தூதன்" "சத்தியசுடர்" "தென்ஒலி" "ஞானதூதன்" ஆகியவற்றைப் பெற்றுப்பரப்புவதும் உசிதமன்றோ.

பரலோக இராச்சியத்தை இவ்வுலகில் பரப்ப முன்வந்த கத்தோலிக்கர் அறியவேண்டியஉண்மைகளைப் பன்னிரண்டாம் பத்திநாதர் கருதினல்மாருக்கு 1956-ம் ஆண்டு மாசிமாதம் 20-ந்திகதி நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் எடுத்து விளக்கியிருக்கிறார். "மக்களின் ஆன்மாவை மையமாகக் கொண்டு திருச்சபை தன் திருத்தொண்டைச் செய்கிறது. மக்களின் இருதயத்தில் இறைவனின் நேசத்தைப் பற்றியெரியச் செய்கிறது. லௌகிக செல்வங்களை அல்ல, ஆத்மீக ஈடேற்றத்தையே இலக்காகக் கொண்டு மக்களின் சமூகங்களை முன்னேற்றக் கத்தோலிக்க சேவை முயற்சிக்கிறது."

கத்தோலிக்க சேவையில் ஈடுபட்ட மக்கள் அரசியலில் ஈடுபடலாமா என்ற பிரச்சினை எழும்பாதிருக்க முடியாது. நிச்சயமாக எல்லாமக்களுக்கும் இருக்கும் அடிப்படை உரிமைகள் கத்தோலிக்கருக்கும் எந்தநாட்டிலும் உண்டு. பொதுவாகக் கத்தோலிக்க சேவையாளர் என்ற அடிப்படையில் கத்தோலிக்கர் அரசியலில் ஈடுபடுவதில்லை. ஆனால் தங்கள் சமய அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும்போது அநேக நாடுகளில் கத்தோலிக்கர் ஒன்றுதிரண்டு எழுந்து தங்கள் எதிர்ப்பை அரசாங்கங்களுக்குக்காட்டி இருக்கின்றனர். தென் இந்தியாவில் கேரளநாட்டில் சில வருடங்களுக்குமுன் கத்தோலிக்கர் நடத்திய எதிர்ப்பும் இலங்கையில் 1960-ம் ஆண்டு மார்கழிமாதத்தில் பாடசாலைகளை அரசாங்கம் அநீதியாய் எடுக்க எத்தனித்தபோது கத்தோலிக்க மக்களிடையில் ஏற்பட்ட எதிர்ப்பும் இதற்கு எடுத்துக்காட்டுகளாக அமையும்.

ஆனால், சமயத்திற்கோ, சன்மார்க்கத்திற்கோ விரோதமான சட்டங்கள் நாட்டில் நடைமுறையிலிராவிடில், கத்தோலிக்கர் மற்றும் கிறிஸ்தவர், பௌத்தர், இந்துக்கள், முஸ்லீம்கள் போலவே அரசாங்கத்துக்கு அமைந்து நடக்க வேண்டிய கடமை பூண்டவர்களாயிருக்கிறார்கள். "செசாருக்குரியதைச் செசாருக்குக் கொடுங்கள்" என்று கிறிஸ்துநாதர்தாமே கட்டளை இட்டிருக்கிறார். ஆகவே எல்லா மக்களும் தங்கள் ஆத்ம ஈடேற்றத்தைப் பெறும் பொருட்டு கத்தோலிக்கர் ஒருமித்தும், தனித்தும், யேசுக்கிறிஸ்துநாதருடைய போதனைகளை எடுத்து மக்களுக்கு விளக்கி அவருடைய இராச்சியத்தைத் தங்களாலியன்றளவுக்கு இவ்வுலகத்தில் பரப்பவேண்டியவர்களாயிருக்கிறார்கள். தேவசிநேகத்தாலும் பிறர்சிநேகத்தாலும் உந்தப்பட்டுக் கத்தோலிக்கர் செய்யும் இப்புனிதசேவையே கத்தோலிக்க சேவையாம்.

(பி. ச.)

---


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3744**

128/3 உவாட்பிளேஸ், கொழும்பு
1. ஞானகாந்தி ஜறேன் இராசரத்தினம்
2. அவரின்புருஷன் செல்லத்துரை இராசரத்தினம் — வழக்காளி.

எதிராக

1. கிறேஸ் இரஞ்சிதமலர் சின்னையா
2. அவரின்புருஷன் கிருலபராசா சின்னையா, யாழ்ப்பாணம், தற்போது டிப்பாட்மென்ற் யுத்புல் ஒவென்டேர்ஸ் பிறிசின் உவாட்டேர்ஸ், நீர்கொழும்பு.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B 3744-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1962-ம் ஆண்டு வைகாசி மீ 26-ந் உ (26-5-62) சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 15,925-ம், இதற்குத்தீர்வை ரூபா 15,000-க்குப் 16-11-60 திகதிதொடக்கம் 16-6-61திகதிவரைக்கும் 100-க்குப் 12வீதவட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5வீதவட்டியும் செலவுதொகையால் ரூபா250 கொடுபட்டது. மிகுதி கழித்துவிடப்பட்டது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளி இறை, "முதிரைக்குளம் வயல்" பரப்பு நெல்லு இலாச்சம் 11 குளி 5-ம், கிணறும், வீடும். இதில் கிழக்குப்புறமாக நெல்லுஇலாச்சம் 5, குளி 8½-யும், கிணறும், புதுவீடும். குறித்த பரப்பு நெல்லு இலாச்சம் 5, குளி 8½-க்கும், கிணற்றுக்கும், புதுவீட்டுக்கும் எல்லை: கிழக்கு — வஸ்தியாம்பிள்ளை அலேசுவின் உரிமைக்காரருக்குரிய காணி. வடக்கு — றோட்டு. மேற்கு — வயிரமுத்து அம்பலவாணர் துரையப்பாவுக்குரிய காணி. தெற்கு — பிரான்சீஸ் அலெக்சாண்டர் திசவீரசிங்கத்துக்கும், ஞானமுத்து கைம்பெண் முத்தம்மாவின் உரிமைக்காரருக்கும், மறு பெயருக்கும் உரியகாணிகள். இதடங்கலும்.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும், விலமதிப்பாளரும்
விதானைவளவு, சித்தன்கேணி,
5-4-62.


---

● இந்திய அரசாங்கத்தின் 1962-63-ம்ஆண்டின் புதிய நிதிவருடத்து வரவுசெலவுத் திட்டத்திலே பாதுகாப்புச் செலவுக்கென்று 48கோடியே 40 இலட்சம்ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவுசெலவுத்திட்டத்தில் அடங்கியுள்ள முழுச்செலவிலே இத்தொகை 25சதவிகிதம்— அதாவது காற்பங்காகும்.

● இம்முறை பாஸ்குத்திருநாளன்று உலக முழுவதிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் ஊர்வலங்களில் கலந்துகொள்ளுமாறு யெருசலேம்நகரிலே திருக்கல்லறைக்கோவில் சதுக்கத்தில் குழுமியிருந்தார்களென்றும், அநேகபிள்ளைகள் மெழுகுதிரிகள், வர்ணமூட்டிய முட்டைகளுடன் சென்றார்களென்றும் செய்தி கிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் மன்றம்

# மாமியாரும் ஒருவீட்டுமருமகளே

— ஆர். எவ். எம். ஜோசவ் —

"இன்றைய திருமணத் தம்பதிகள் போதிய ஆயத்தமின்றியே மெய்விவாகம் எனும் தேவதிரவிய அனுமானத்தைப் பெறுகின்றனர்." எனக்குச் சமீபத்தில் பங்குக் குருவானவர் ஒருவரிடமிருந்துவந்த கடிதமொன்றில் எழுப்பப்பட்ட அபாயக்குரல் இது. இதுவோர் அபாய அறிவிப்பு மட்டுமன்று, ஆழ்ந்த சிந்தனைக்குரிய விடயமுங்கூட. திருமணம் என்பது இன்று ஒரு கேலிக்கூத்தாகிவிட்டது என்கிறார்கள். பிரித்தானியாவிலுள்ள மருத்துவ புள்ளிவிபர நிபுணர்கள். திருமணமாகி நான்கு வருடங்களுக்கும் பதினொரு வருடங்களுக்குமிடையில் எண்ணற்ற இளங்குடும்பங்கள் சிதைந்து பாழாகி வருகின்றன என்கின்றது பிரித்தானிய விமர்சனம் ஒன்று. தினந்தினம் நாம் படிக்கும் புதினப் பத்திரிகைகளும் பெருங்கொட்டையெழுத்துகளில் இதே கதையைத்தான் கூறுகின்றன. சர்வேசுரனால் முதன்முதல் ஏற்படுத்தப்பட்ட பொருத்தனையாகிய மெய்விவாகம் இன்று மனிதனின் 'வேடிக்கை விளையாட்டாக'மாறியது விந்தையிலும் விந்தையன்றோ!

விவாக இரத்துகளுக்கும் குடும்பபிரிவினைக்கும் மாமி—மருமகள் தகராறுகளைத்தான் குறைகூறினர் ஒருகாலம். மனோதத்துவ சாஸ்திரத்தின்படி இத்தகைய தகராறுகள் ஏற்படுவது இயல்பு. ஒரு தாயானவள் தன்மீது வைக்கும் அன்பில் இன்னுமொரு பெண் பங்கெடுக்க, தன்பங்கு குறைவதைக்கண்டு பொறாமைப்படுவது இயற்கையன்றோ! ஒருவனது உடலின் உஷ்ணம் சடுதியாக மாறுபடுவதால்—கூடுவதால் அல்லது குறைவதால்—அவனது உடம்புக்கு எவ்வித ஆபத்து ஏற்படக்கூடுமோ அதுபோல ஒருவன் தன் உள்ளக் களஞ்சியத்திலுள்ள அன்பை தன் துணைவிக்கும் பகிர்ந்தளிக்கும்போது குடும்பத்துக்கு ஆபத்தான நிலை ஏற்படினும் ஏற்படலாம். மருமகளுக்கெதிராகக் கிண்டல் செய்வாள் மாமியார், கோள்மூட்டுவாள், குற்றம் காண்பாள். ஆனால், இயற்கையோடு அமைந்ததெதுவும் காலகதியில் மீண்டும் சுயநிலையை எய்தும் என்பது திண்ணம். மாமியார் தானும் ஒரு வீட்டு மருமகள் எனும் உண்மை மேன்மேலும் உணரப்பட்டுவரும் காரணத்தால், மாமி-மருமகள் பிரச்சினை குறைந்துகொண்டே வருகிறதெனலாம். பதிலாகப் புதுப்புதுப் பிரச்சினைகள் தலைகாட்டியுள்ளன இன்று.

திருமணமாகுவோர் தத்தம் அந்தஸ்தின் கடமைகளைச் சரிவர உணராது கண்மூடித்தனமாக இல்வாழ்க்கையில் இறங்குவது ஏற்றில், பேராபத்தாக முடிகின்றது. குருத்துவத்தைப் போன்று மெய்விவாகத்துக்கும் அழைத்தல் வேண்டும். இல்வாழ்வுக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்ற முடியாதநிலையில் இல்லறவாழ்க்கையில் ஈடுபடத் துணிபவரினது கதையும் நிராயுதபாணியாகப் போர்முனையில் இறங்குபவரினது கதையும் ஒன்றேதான். நமது ஆதித்தாய் தகப்பன் விலக்கப்பட்ட கனியைப் புசித்த அன்றே தமது பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்தை இழந்துவிட்டனர். வாழ்க்கையோடுகூடிய அத்தனை துன்பதுரிதங்களும் அவர்களைச் சூழ்ந்துகொண்டன. அவற்றின் மத்தியில் பேரிடிமுழக்கத்துடன் எதிரொலித்த பயங்கர வார்த்தைகள்—"நெற்றியின் வியர்வை நிலத்தில்விழ உழைக்கக்கடவாய் கஷ்டப்பட்டுப் பிள்ளைகளைப் பெறுவாய்" இல்லறவாழ்க்கையின் இரத்தினச் சுருக்கமாகும். இந்தச் சாபத்திலிருந்து இன்று நாமும் தப்ப முடியாது. முயற்சிகுன்றி கட்டிலிலிருந்து காலாட்டும் சோம்பேறிகளுக்கும் சொகுசுக்காருக்கும் குடும்ப வாழ்க்கை எதற்கு! பிள்ளையைப் பெற்றெடுத்தால் போதுமா? அதைப் பேணிவளர்ப்பதும் பெற்றெடுத்தவளது கடமையன்றோ! தன்பிள்ளையைத் தானே பாலூட்டித் தாலாட்டி வளர்க்காது ஆயாவிடத்தில் தாரைவார்ப்பது நாகரிகமென நினைக்கும் பெண்களுக்கும் இல்லறவாழ்வுக்கும் வெகுதூரம்! மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்பதும் நல்லமக்களைப்பெறுதலே அதற்கு நல்ல அணிகலம் என்பதும் வள்ளுவப் பெருந்தகையின் உண்மைவாக்கு.

இன்று பெண்களின் பொருளாதார சுதந்திரமும் குடும்பப் பிரிவினைக்கு ஒரு முக்கியகாரணமாக அமைந்துள்ளது. ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வதெற்கெனப் போராடிய பாரதியார், பெண்கள் தம்சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்வார்களென எண்ணவில்லை. கடமைக்குப் பின்னரே உரிமை என்பதை அவர் வற்புறுத்தாமலில்லை. மணமான, உழைக்கும் பெண்களுக்கு துணிச்சல் அதிகமாகி கணவனிடமிருந்து பிரிந்து வாழ்வதற்கும் அவர்கள் தயங்குவதில்லை. கணவன் ஓரிடத்திலும் மனைவி வேறோரிடத்திலும் வேலைபார்ப்பதால் அநேக சிக்கல்கள் ஏற்படுவதுண்டு. எனது நணபர் ஒருவர் தனது மெய்விவாகச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காக தனக்குப் பழக்கமான ஒரு குருவானவரிடம் சென்றார். மகிழ்ச்சியோடு அழைப்பை ஏற்றுக்கொண்ட குருவானவர், கொழும்பில் எங்கு வீடெடுத்திருப்பதாக நண்பரை விசாரித்தார். தான் வீடு எடுக்கவில்லையென்றும் பெண்ணை அவளது வீட்டிலேயே விட்டுவிட்டுப் போவதாகவும் பதிலளித்ததைக் கேட்டதும் குருவானவர் அழைப்பை உடனடியாக நிராகரித்துவிட்டு, பிரிந்துவாழ்வதால் ஏற்படும் பிரச்சினைகளையெல்லாம் எடுத்துக்காட்டி நண்பரை அனுப்பினார்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற மனோபாவம் வேண்டும் குடும்பங்களில் ஒற்றுமைநிலைப்பதற்கு. மறுவுலகவாழ்வுக்கு இல்வாழ்க்கை ஓர் ஆயத்தவாழ்க்கை. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்."

---

● இந்தியாவிஷயமாய்ச் சீனர்கள் அனுட்டித்துவரும் கொள்கைகளிலே நம்பிக்கைதரும் மாறுதல்கள் எதுவுமில்லையாம். வடஎல்லைப்புறமாக இந்தியப் பிரதேசத்திலுள்ள லடாக்கினுள் சீனர்கள் புதியகாவல்நிலையம்ஒன்றை அமைத்துள்ளார்கள். அவர்களின் இந்தப்புதிய ஆக்கிரமிப்பானது புதுடில்லியிலே ஆழ்ந்தகவலையை உண்டு பண்ணியிருக்கிறது.

● கி. மு. 753-ம்ஆண்டு சித்திரை மாதம் 21-ந்திகதியன்று றொமுலஸ் என்பவர் அத்திவாரமிட்டதாகக் கூறப்படும் ரோமைநகர் சென்ற21-ந் திகதி சனிக்கிழமை தனது2,715-வது ஞாபகவிழாவைக் கொண்டாடியது. இதைமுன்னிட்டு அரசாங்கபிரதிநிதிகளும், மற்றும்பிரபல்யஸ்தர்களும் கப்பிற்றல் குன்றின்மீது திரளாகக் குழுமியிருந்தார்கள்.

---

### அர்ச். சூசையப்பர் பந்தியின் 1961-ம் ஆண்டுக்கான

# ஐம்பத்திநான்காம் ஆண்டறிக்கை

யாழ்ப்பாணம், சென் வின்சென்ற் டிபோல் தருமசபை, அர்ச். சூசையப்பர் பந்தியின் 1961-ம் ஆண்டுக்கான 54-ம் ஆண்டு அறிக்கை வருமாறு:

**அங்கத்தவர்களும் கூட்டங்களும் :**

கடந்த வருடத்தில் எமது பந்தியில் 28 அங்கத்தவர்கள் கடமையாற்றினர். கூடப்பட்ட கூட்டங்கள் 51. கூட்டங்களுக்குச் சமுகமளித்த அங்கத்தவர்களின் சராசரி எண்ணிக்கை 20.

**ஞான முயற்சிகள் :**

ஆத்தும சரீர நன்மைகள் செய்யும் பொருட்டு எமது அங்கத்தவர்கள் வறியவர்களின் இல்லங்களுக்கு 2,660 முறை தரிசனை அளித்தனர். ஆஸ்பத்திரிக்குச் சென்று 640 நோயாளரைச் சந்தித்து ஆறுதல்வார்த்தைகள்கூறிப் பத்திக்குரிய புத்தகங்களும், பத்திரிகைகளும் கொடுத்து உதவியுள்ளனர். சிறைச்சாலைக்குச் சமுகமளித்த கைதிகளுக்குப் புத்திமதியும், ஆறுதலுமுரைத்திருக்கின்றனர்.

**இலவச புத்தகசாலை :**

எமது பந்தியின் இலவசபுத்தகசாலையிலிருந்து 120 புத்தகங்கள் வாசிக்கக் கொடுத்ததுமன்றி, 500 பத்திரிகைகளும் 1,830 பத்திக்குரிய புத்தகங்களும் கொடுத்து உதவியுள்ளோம்.

**அர்ச். அந்தோனியார் தரும அப்பக் காணிக்கை :**

வழமைப்பிரகாரம் அர்ச். அந்தோனியாரின் பக்தர்கள் தாங்கள் அர்ச்சியசிட்டர்மூலம் அடைந்துகொண்ட நன்மைகளின்பொருட்டுத் தருமத்திற்குஉதவுவதற்காக இவ்வருடமும் 2,510 ரூபா 85 சதம் அனுப்பியிருக்கின்றனர். அவர்களின் விசேட கருத்துகளுக்காகவும், அவர்களுக்கு அளித்தநன்மைகளுக்கு நன்றியாகவும் சபை அங்கத்தவர்கள் அனுதினமும் தனிமையாகவும், கூட்டங்களின்போது ஒருமித்தும் அர்ச். அந்தோனியாரின் உதவியோடு சர்வ வல்லபரான சர்வேசுரனை 10,200 முறை இரந்து மன்றாடியுள்ளனர்.

என்றாலும் எங்கள் பத்திக்குறைவைச் சீர்ப்படுத்தவாக்கும் நல்ல பிதாவாகிய சர்வேசுரன் இம்முறை வழமையிலும் பார்க்க 65 ரூபா 30 சதத்தால் குறைவு வரச்செய்தார். அவருடைய திருச்சித்தம் புகழப்படக்கடவதாக.

**பிடிஅரிசித் தண்டல் :**

சென்ற வருடத்தில் நாம் செய்ததுபோலவே எமதுபந்தியில்பிரிக்கப்பட்டுள்ள 8 வட்டாரங்களிலும் சேர்க்கப்பட்ட பணம் 405 ரூபா 47 சதம். முன் வருடத்திலும்பார்க்க இவ்வருடம் எங்கள் சபையின் சில சகோதர அங்கத்தவர்களின் வேகமான ஊக்கத்தால் 67 ரூபா 84 சதம் கூடுதலாயிற்று. சர்வ வல்லபரானசர்வேசுரன் அவர்களை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

**நத்தால் தண்டல் :**

நத்தால் காலத்தில் ஏழைகளுக்கு விசேட உதவிகள் செய்யும்பொருட்டு வழமைப்பிரகாரம் எமது உபகாரிகளிடம் விசேட உபகரிப்புக்குச் சென்றோம். இவ்வருடமும் அவர்கள் தாராள மனதுடன் தந்துதவிய தொகை 647 ரூபா 16 சதம். முன் வருடத்திலும் 187 ரூபா 64 சதம் மேலதிகமாகக் கிடைத்தது.

**தனிச்சங்க உதவி :**

இவ்வருடம் தனிச்சங்கத்தினர் எடுத்துக்கொண்ட முயற்சி அபாரமானது. எமது பந்திக்கு ஏராளமான உடுப்புகளைச் சேகரித்து உதவியதுமன்றி 164 ரூபா 80 சதம் பெறுமதியான அரிசியும் தந்துதவினர்கள். அதனால் எத்தனையோ வறியமக்களை எம்மால் திருப்திப்படுத்த முடிந்தது. எனவே, இத்தருணத்தில் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு, அன்னாரின் தன்னலங் கருதாப் பணிக்கு எல்லாம் வல்ல நல்ல தேவன் தகுந்த சன்மானம் அளிக்க அவரை இரந்துகொள்ளுகின்றோம்.

**உபகரிப்புகள் :**

இவ்வருடம் உபகரிப்புகள் மூலம் கிடைத்த முழுத்தொகை 4,596 ரூபா 49 சதமாகும். இத்தொகை கடந்த வருடத்திலும்பார்க்க 139ரூபா 69சதத்தால் அதிகரித்துள்ளது.

நிற்க, மேற்தொகைப் பணத்தைக் கொண்டு 72 குடும்பங்களைக் கொண்ட 182 பேருக்குக் கிழமை வீதமும், தரும உதவியுமாக 2,703ரூபா 25சதம் செலவு செய்துள்ளோம்.

இன்னும் வறியவர்களின் வீடுகள் வேயவும், வஸ்திரமாகவும், முயற்சி இல்லாதவர்களுக்கு சிறு வியாபாரத்துக்கும், அநாதபிள்ளைகளுக்குப்புத்தகம்வாங்கவும் 689 ரூபா 30 சதம் செலவு செய்துள்ளோம்.

**நன்றியுரை :**

எமது பந்தியின் வளர்ச்சியை விரும்பி எமமை ஊக்கித்துவரும் மகாவந். மேற்றிராணி ஆண்டவர் அவர்களுக்கும், எங்களை வழிநடத்திவரும் அதிவண. ஜே. புறோகான் சுவாமியார் அவர்களுக்கும், ஒவ்வொரு கூட்டங்களுக்கும் தவறாது சமுகந்தந்து கூட்டத்தை நடப்பித்துவரும் வண. எஸ். ஜி. இல்லறி சுவாமியார் அவர்களுக்கும், ஆசனக்கோவில் கட்டளைச் சுவாமியார் அவர்களுக்கும், சகோதர பந்தியினர், உபகாரிகள், அபிமானிகள் யாவருக்கும் எமது தாழ்மையான நன்றி உரியதாகுக.

ஈற்றில் எங்களையும், எங்கள் உபகாரிகளையும் ஆசீர்வதித்து, எமக்குவேண்டிய ஆன்ம சரீர நன்மைகளைத் தந்துதவும் எல்லாம்வல்ல ஏகபராஞ்சுடரை நெஞ்சார வாழ்த்தி வணங்குகிறோம்.

---



## 2-ம் வருட மரண ஞாபகம்

எங்கள் நேசத் தந்தையாகிய ஸ்ரீமான் பிறெட்றிக் நீக்கிலாப்பிள்ளை (தம்பிராசா) அவர்கள் மரணத்திரையில் மறைந்த 2-ம் வருடம் இம்மாதம் 9-ந் திகதி புதன் கிழமை பூர்த்தியாகின்றது. இதைக்கண்ணுறும் யாவரையும் இவரது ஆன்மசாந்திக்காக மன்றாடும்படி தயவாய்க்கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இரக்கமுள்ள யேசுவே இவருக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

அருமைத் தந்தையைப் பிரிந்து துயருறும் மக்கள் :

திருமதி அன்னம்மா இராசதுரை

,, சிசீலியா அந்தோனிப்பிள்ளை

,, [illegible] யோசேப்பின்

கிறிஸ்தோப்பர்

2-5-62 பாண்டியந்தாழ்வு.

---

● பீடி, சிகறெற்முதலியன அதிகமாகப்புகைப்பதானது வாய், தொண்டை, சுவாசப்பை ஆகியஉறுப்புகளில் புற்றுநோய்உண்டுபண்ணக் காரணமாயிருக்கலாமென்று இந்தியாவில்நடத்திய பரிசோதனைகள் காட்டுவதாக லோகசபையிலே சுகாதாரமந்திரி டக்றர்சுசீலா நயார்தெரிவித்திருக்கின்றார்.

● சிகறெற்புகைப்பது சுவாசப்பைப் புற்றுநோயை உண்டுபண்ணுகிறதென்று லண்டன்நகரிலே றோயல் கல்லூரி வைத்தியர்கள் அறிக்கையிட்டதின்பேரில் திடுக்காட்டமடைந்த பிரித்தானியமக்கள் விசேடமாகப் பெண்கள் சுங்கானில்விழுந்து, அதனால் சுங்கான்விற்பனவு அங்கே 50சதவிகிதம் அதிகரித்திருக்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேதினமாகிய தொழிலாளர் தினம்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

பளக்குறைவு மற்றும்நிதிநெருக்கடி முதலியன ஏற்படமுடியும். இவ்விதநிலை தனிப்பட்ட முதலாளிகளைப் பொறுத்தமட்டிலும் உண்மையானதே.

சென்ற1-5-62மேதினமன்று யாழ்ப்பாணக் கத்தோலிக்க தொழிலாளர் நடாத்திய ஒருசல்லாபத்திலே சிறந்தஉண்மைகள் சாதாரணமக்களின் வாயிலிருந்து வெளிவந்தமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதே. அவர்கள் விசேஷமாக ஒருகத்தோலிக்க தொழிலாளிக்கும், ஒருபிறசமய தொழிலாளிக்குமுள்ள வித்தியாசத்தை ஆராய்ந்தனர். ஒருவன்தேவசித்தத்துக்குக் கீழ்ப்படிந்து மனச்சாட்சியோடு வேலைசெய்தால் ஒருதேவ அழைத்தலை நிறைவேற்றுவதாய் இருக்குமென்றமுடிபுக்கு வந்தனர். அடுத்தபடியாக, கத்தோலிக்கருக்கும், குருமாருக்கும் இருக்கவேண்டியதொடர்பை ஆராய்ந்தனர். சமயத்துறையிலே குருமாரும் எங்கள்முதலாளிகள் போல் இருக்கிறார்கள்; அவர்களுக்கு எங்கள்வணக்கமுள்ள அமைச்சலைக் காட்டவேண்டும்; ஏனெனில், அவர்கள் யேசுக்கிறீஸ்துநாதரின் பிரதிநிதிகளாய் இருக்கிறார்கள் என்பதையும் எடுத்து ஆராய்ந்தனர். ஈற்றில், ஒவ்வொருகத்தோலிக்க தொழிலாளியும் நன்முன்மாதிரிகையால் பிறருக்குக் கிறீஸ்தவசமயத்தின் சிறந்தகுணங்களாகிய சகோதரத்துவம், நீதி, நேர்மை, உண்மை முதலியவற்றை எடுத்துக்காட்ட வேண்டுமெனறும் வற்புறுத்தினர்.

அன்று கடற்கரைமைதானத்தில் மாலை ஏழுமணியளவில் தொழிலாளிகளின் பிரதிநிதி திரு. ஆசீர்வாதம்அவர்கள் ஆற்றிய சொற்பொழிவில் "திருச்சபையானது ஏறக்குறைய எழுபது வருடங்களுக்குமுன் அதாவது 1890-ம்ஆண்டில் 13-ம்சிங்கராய பாப்பானவர்மூலம் "றேறும நொவாறும"என்ற சுற்றுநிருபத்தில் 19-ம்நூற்றாண்டிலே உலகில விஞ்ஞானஆராய்ச்சியின் காரணமாகத் தொழிற்துறையில் ஏற்பட்டபுரட்சியைப்பற்றியும், முதலாளி தொழிலாளி மட்டிலுள்ள கடமைகள் பற்றியும், தொழிலாளிகளின் கடமைகளைப் பற்றியும், உரிமைகளைப்பற்றியும் மிகவும்தெளிவாக எடுத்துவிளக்கியிருக்கிறார்" என்று கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் 1930-ம்ஆண்டு 11-ம்பத்திநாத பாப்பானவர் "குவாட்றிஜசிமோ அன்னோ" என்ற சுற்றுநிருபத்திலும் அதேவிஷயங்களை எடுத்து விளக்கியிருக்கிறார் என்றும் கூறினார்,

மேற்கூறப்பட்டவைகளை ஆராயும்பொழுது திருச்சபை தனது பிள்ளைகளுக்கு — பெரும்பாலான மக்கள் தொழிலாளரே— தங்கள் தொழில் நிலையங்களில் அவர்கள் காட்டவேண்டிய கிறீஸ்தவ புண்ணியமாதிரிகைகளைப்பற்றி விளக்கியிருக்கிறது என்பது தெற்றென விளங்கும்.

மேதினக்கொண்டாட்டத்திலே பங்குபற்றிய ஒவ்வொருதொழிலாளியும் தன்கடமைகளையும், உரிமைகளையும் உணர்ந்து, தான் சென்றவருடத்திலே நடந்தமுறையில் ஏற்பட்ட குற்றங்குறைகளை— குறைவுநிறைவுகளை ஆராய்ந்து ஒருசிறந்தமுறையில் இப்புதியவருடத்தில் ஒழுகமுயற்சிப்பது மிகவும்பொருத்தமாகுமன்றோ!

— பி. சவரிமுத்து

## சர்வேசுரனின் தாய் என் தாய்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

அனாதைகள்தானே. "பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே"என்று சொல்லக்கற்பித்தவர் "பரலோகபூலோக 'தாயே"என்று சொல்லக் கற்பியாதிருப்பாரா? அப்பாவைக் காண்பித்த சகோதரர் அம்மாவைக் காண்பியாதிருந்தால், "அம்மாஎங்கே" என்று குழந்தை சகோதரனைக்கேட்காதா? இரட்சகரின் மரணசாசனப் பத்திரத்திலே அவர்தாயாரும் சேர்ந்திராவிடின் "எல்லாம்முடிந்தது" எனக் கூறமுடியுமா? எல்லாம் முடிந்ததா? சகலத்தையும் கொடுத்து ஒன்றுமாத்திரம் கொடுக்காதவர் "முடிந்தது எல்லாம்" என்று கூறலாமோ?

பால்அருந்தி வளராத பிள்ளை இல்லை, "அம்மா தேவதாயே" என்று அழையாத கத்தோலிக்க மக்களுமில்லை. இதனால்அன்றோ! "சர்வேசுரனின் தாய் என் தாயெ"ன்று அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கூறியிருக்கிறார். மரியம்மாளோடு ஒன்றித்திருக்கிறவன் சர்வேசுரனோடு ஒன்றித்திருக்கிறான். மரியம்மாளைவிலகிநிற்பவன் சர்வேசுரனை விலகிநிற்கிறான். ஆம், நீ உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டபோதிலும், சர்வசனங்களும் உன்னை அண்டிவந்து தொண்டுசெய்தபோதிலும், உன்தாயை நீ இழப்பாயானால் உனக்கு என்னபயன்? நீ பூலோகமேலோக சாஸ்திரங்களைக் கற்றவனாயிருந்தாலும், பரலோக இராக்கினியை அறியாதிருந்தால் நீ பரலோகம்சேருவது எங்ஙனம்? ஒருபாவிதானும் ஏனையமனுஷரை மதியாதிருந்தபோதிலும்தன்னுடையதாயாரை மதித்துவருகிறான். மற்றவர்களை அறியாதிருந்தாலும் தன்னுடைய அன்னையை அறிந்திருக்கிறான். உலகமெல்லாம் ஆதாயமாக்காதிருந்தாலும், தன்னுடைய தாயாரை ஆதாயமாக்கிக் கொள்ள நன்கு அறிந்திருக்கிறான். உலகம் அவனை வெறுத்துத் தள்ளும்பொழுது தன்னுடைய தாயாரின் பாதத்தில் விழுந்து பொறுத்தல்கேட்டு மன்றாடுகிறான் உலகசாஸ்திரம் அறியாதவனாய் இருந்தபோதிலும் பரலோகஇராக்கினியை அறிவானாதலினால் பரலோகம்சேரும் வழியை அறிந்திருக்கிறான். மாதாவைச் சங்கியாத உலகமதிப்புள்ள மனுஷன் உத்தமனா? அல்லது மாதாவைச் சங்கிக்கின்ற பாவி உயர்ந்தவனா?

தனது நேசஅன்னையைச் சங்கிக்கின்ற மேரைமரியாதையிவிருந்தே ஒருவன் உத்தமபுருஷனென்று தீர்மானிக்கப்படுகிறான். அன்பில்லாத சென்மம் வீணென்று எம்மதத்தினரும் கூறுவது உலகம் அறிந்ததே.

— J. A. F.

# கத்தோலிக்க செய்திகள்

### கமக்காரர் மத்தியிலே அருளப்ப பாப்பரசர்

அருளப்ப பாப்பரசர் அன்று வத்திக்கான் பேட்டிஒன்றிலே 15,000 இத்தாலிய கமக்காரரை வரவேற்கலாயினர். அவர்களில் இருவர் அவருடைய சகோதரர்கள். "நாம் ஒரு குருவாக வந்திராவிட்டால் இன்று தினம் அநேகமாய் நாமும் உங்களுடனேதான் கீழே நின்றுகொண்டிருப்போம்" என்று அவ்வேளை அவர்கூறலாயினர். பேட்டியின்போது சமூகமாயிருந்த கமக்காரர் முனபாக ஜியுசெப்பி றொங்கல்லி, சவேரியோ றொங்கல்லி என்ற அவருடைய சகோதரர்கள் நின்றார்கள். இவர்கள் அங்கு சமூகமாயிருப்பதைப்பற்றிப் பாப்பரசர் யாதொன்றும் குறிப்பிடவில்லை. பிந்த பாப்பரசர் மாளிகையிலே இவர்கள் பிரத்தியேகமாக ஒரு குடும்பத்தினராய்க் கூடியிருந்தார்கள்.



முத். மாட்டீன் தே பொறெஸ்

வத்திக்கான்நகர் 27-4-62.
தந்திச்சமாச்சாரம்

16-ம் நூற்றாண்டைச்சேர்ந்த பெருவியநாட்டினரான மாட்டீன் தெ பொறெஸ் இங்கு அர்ச் பேதுருவானவர் மகாலயத்திலே அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெறுவாரென்று அருளப்ப பாப்பரசாது திருச்சடங்காசார முறைகளின் ஆசான் கருதினால்மாருக்கும், குருசிரேஷ்டர்களுக்கும் அறிவித்திருக்கின்றார். 1579-ம்ஆண்டு பிறந்தவரான இந்தஎதிர்கால அர்ச்சியசிட்டவரின் தாயாகிய அன்னவலெஸ்குவெஸ் பனமாநாட்டிலிருந்து விடுதலைசெய்யப்பெற்ற ஒருகாப்பிரிஅடிமை. இவர் தந்தை பேர்கோஸ் நகரத்து ஸ்பானிய பிரபுவான தொன் ஜூவான் தெபொறெஸ் என்பவர். இவர் கலறுவாவின்நைற்பட்டவர்த்தனரும், அல்காந்தராவின் உயர் வரிசைக்குரிய மகிமைச் சிலுவைபெற்ற நைற்பட்டவர்த்தனருமாவர். மாட்டீன் தெ பொறெஸ் 15-ம் வயதிலே தொமினிக்கன் சபையிலே ஓர் சாதாரண சந்நியாசராகச் சேர்ந்து, காலகதியில் லீமாநகரின் ஏழைகளுக்கெல்லாம் ஒரு நண்பராகியதுடன் கைநெகிழப்பட்ட பிள்ளைகளுக்கென்று அனேக தருமஸ்தாபனங்களையும் அடியிட்டார்.

இவர் 1639-ம் ஆண்டு மரணமடைந்தார். அர்ச்சியசிட்டபட்டம் சூட்டுவதற்குப் பலகாலும் முதல் நடவடிக்கையான முத்திப்பேறுபெற்ற பட்டம் இவருக்கு 1837-ம் ஆண்டு அருளப்படலாயிற்று.

நிற்க நிகழும் வைகாசிமாதம் 6-ந் திகதியாகிய இன்று ஞாயிற்றுக்கிழமையே முத். மாட்டீன் தெ பொறெஸிற்கு அர்ச்சியசிட்டபட்டஞ் சூட்டும் தினமாக 24 கருதினால்மாரும், 50 மேற்றிராணிமாரும் சமூகமளித்திருந்த கருதினால்மார் திருச்சங்க கூட்டத்திலே அருளப்ப பாப்பரசரால் ஊர்சிதம் செய்யப்பட்டிருப்பதாகப் பிந்திய சமாச்சாரம் தெரிவித்திருக்கிறது.

### பாஸ்குத்திருநாளிலே பாப்பரசரின் சமாதான வேண்டுகோள்

இம்முறை பாஸ்குத்திருநாளன்று அர்ச். பேதுருவானவர் மகாலயத்தின் மேன்மாடியில்நின்று, கீழே 2,50,000 பேரென மதிப்பிடப்பட்டுத் திரண்டு காத்திருந்த மக்கள்குழாமுக்கு அருளப்பபாப்பரசர் "ஊர்பி எத் ஓர்பி" என்ற பாரம்பரியமான ஆசீர்வாதத்தை வழங்கியபோது, வழமைக்குமாறாக எல்லவர்மனதிலும் அழுத்தமாகப் பதியக்கூடியவயைிலே சிற்றுரைஒன்றை நிகழ்த்தலாயினர். "நாமெல்லாம் அச்சங்கொள்ளுகின்ற சமாதானபங்கம் ஏற்படக்கூடும்" என்பதுபற்றிப்பேசி, "எம்மேல் இரக்கம்வைத்து, எமக்குச் சமாதானத்தை அருளும்"என்று கடவுளை வேண்டிக்கொண்டார்.

வெண்மையான உடை அணிந்து, மும்மடிக்கிரீடம் புனைந்து, மேன்மாடியிலே பொற்சிங்காசனம்ஒன்றில் வீற்றிருந்து, எப்போதுமே மழைவந்து அச்சுறுத்தும் ஒருநாளிலே பாப்பரசர் பேசலாயினர். சென்றஆண்டில் போன்று ரூஷியபாஷைஉட்படப் பதினைந்துபாஷைகளிலே மனப்பாக்கியமான ஈஸ்றர் சகலருக்கும் கிட்டவேண்டுமென ஆசித்து அவர் தம்து சிற்றுரையை முடித்தார் அவர் ஆங்கில பாஷையில் பேசியபோது அந்தமாபெரும் சனக்குழாம் மத்தியில்நின்ற பிரித்தானியர், அமெரிக்கரின் குழுவொன்று உரத்தசப்தமாக வாழ்த்தியது.

பாப்பரசர் பேசிமுடிந்ததும் அவரது சமாதானவேண்டுகோளின் அடையாளமாக 500மாடப்புறாக்கள் பறக்கவிடப்பட்டு அப்போாலய சதுக்கத்துக்கு மேலாக நாலாதிசையும் பறந்துசெல்லலாயின. அவரது மேன்மாடிப்பேச்சு முழுவதும் சமாதானத்தையும், உலகின் அல்லல்களையும் பற்றியதாகவே இருந்தது.

> செபமாலை செபிக்கும் சேவைஒன்றை நமக்குக் கொடுங்கள்; நாம் உலகத்தையே வெற்றிகொள்வோம்.
> 11-ம் பத்திநாத பாப்பரசர்

**R. PAPAYAH**
OPTICIAN
133, STANLEY ROAD
(Old Goodshed Road, Jaffna)
CONSULT BEFORE GOING ELSEWHERE
OVER 30 YEARS EXPERIENCE
PRESCRIPTION ACCURATELY MADE
TESTING FREE

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday May 6-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org